12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Official Organ of the D. M. K.

மல..2 | திருவள்ளுவர் ஆண்டு 2009 24—12—1978 | இதழ் 15

அழகிரி நடத்திச் சென்ற தமிழர் பெரும்படை

1938-ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் நாள் தமிழர் பெரும்படை திருச்சியிலிருந்து புறப்பட்டது. தஞ்சை வழக்கறிஞர் ஐ. குமாரசாமி பிள்ளை தலைமையில் 101 பேர்களடங்கிய இப்படையை பட்டுக்கோட்டை அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி அவர்கள், தளபதியாகவும், நகரதூதன் ஆசிரியர் மணவை ரெ. திருமலைசாமி அமைப்பாளராகவும் இருந்து நடத்திச் சென்றனர். மூவலூர் மூதாட்டி இராமாமிர்தத்தம்மையாரும் இப்படையில் பங்கு கொண்டார்.

இப்படை புறப்படுவதற்கு முன் திருச்சி டவுன் ஹாலில் ஓர் வழியனுப்புக் கூட்டம் நடைபெற்றது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தத் தமிழர் பெரும் படை மொத்தம் 42 நாட்கள்-234 கிராமங்களுக்கும் 60 நகரங்களுக்கும் சென்று இந்தி ஏதிர்ப்புப் போருக்கு ஆதரவு திரட்டியது 87 பொதுக்கூட்டங்களில் இந்தி எதிர்ப்புப் பிரச்சாரம் செய்தனர். கடைசியாக சென்னை அடைந்தனர். சென்னைக் கடற்கரையில் அவர்களுக்கு வரவேற்புப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பெரியார் அவர்கள் வரவேற்றுப்பேசினர்.

இந்தி எதிர்ப்பு மாநாட்டுச் சிறப்பிதழ்!

இணைக்கும் கயிறும் அறுக்கும் கத்தியும்!

நமது தாய் மொழியாம் தமிழுக்கு—இந்த மண்ணில் ஆண்டாண்டுக் காலமாக இழைக்கப்பட்டு வந்த அநீதி, அக்கிரமம், இழிவு - ஆகியவை மாற்றப்பட வேண்டும். அந்த அநீதியை நாம் உணர்ந்து நீதிக்குப் போராடும் நிலையில அந்த இழிவை நிலைபெறச் செய்யும் வகையிலும் என்றென்றும் தமிழ்மொழியையும். அதன் வழி உருவான கலை, நாகரிகம், பண்பாடு, மரபு ஆகியவற்றையும், அதனைப் பேசி வாழும் தமிழ் மக்களையும் ஒரு வகையான அடிமைத் தனத்திற்கு ஆட்படுத்தி, தமிழையும் பிற மொழிகளையும் பேசும் மக்களையெல்லாம் இந்தி மொழி ஆதிக்கத்திற்கு உட்படுத்தி இரண்டாந்தரக் குடிமக்களாக எந்நாளும் தாழ்த்தும் முயற்சியை முறியடிக்கவே இந்தி எதிர்ப்பு இயக்கம் பிறந்தது என்னும் உண்மை நாடறிந்தது; சிந்திக்கக் கூடிய எல்லோராலும் ஏற்கப்பட்டதுங் கூட.

பயன்படுத்துவோம் என்னும் உறுதிமொழியை அவ்வப்போது வழங்கி வருகின்றனர்.

தலைமையமைச்சராக அன்று இருந்த பண்டித ஐவகர்லால் நேருவிடம் இந்த உறுதிமொழியைப் பெறுவதற்காக நமது கழகத் தோழர்கள் சிந்திய இரத்தமும், இழந்த இன்னுயிர்களும், ஏற்றுக் கொண்ட தியாகமும். நடத்திய போராட்டங்களும் நாடறிந்த செய்தியாகு'. வரலாற்றை உருவாக்கிப் பெற்ற அந்த உறுதிமொழியை அவ்வப்போது மத்திய அரசினர் கைவிடுவதும், மாறுன நடைமுறைகளை உருவாக்குவதும், அந்த உறுதிமொழியை நிலை பெறச் செய்யவே, எந்நாளும் விழிப்போடிருந்து நாளும் போராட்டச் சூழ்நிலையில்

என்று கருதுவோர் ஓர் உண்மையை உணர்ந்தாக வேண்டும்.

இந்தி பேசுவோர் எத்தனை கோடி தெரியுமா? என்று அந்த எண்ணிச்கையையே மிகைப்படுத்தி — அவர்கள் பேசினும் இந்தி பேசுவோர் எனப்படுவோரை மட்டும்தான் அந்த மொழி இணைக்கும். அதுவும் கூட இந்தியில் உள்ளபத்துக்கு மேற்பட்ட தனித்தன்மையுள்ள பிரிவுகள் காரணமாக ன்னும் பல ஆண்டுகள் ஆகும். பிறமொழி பேசுவோரை அது இணைக்காது. உறவை வளர்க்காது; அதன் ஆதிக்க நிலையால் வேற்றுமையையேஅதுவளர்க்கும். இன்றே அந்தநிலை வளருவதை யாரும் காணலாம்.

படி எண்ணினுல் அது அறிவுடைமையாகுப் ?

இவைகளைவிட இன்னும் வலிவான சாதனம் ஜனநாயக உணர்வோடு ஒட்டி சமத்துவம் வளர்க்கும் சாதனம்; இன்றைய ஒற்றுமையும், பொது ...க்கும உருவாகரும் சாத ...ன்றைய இந்தியாவை ...த்துக் கொண்டுள்ள ... சாதனம் ஆங்கிலம்

...ங்கிலத்தை அகற்றுவது ...மையை அகற்றுவதே ...ம். இந்தியாவெங்கும ...கொண்டிருக்கும் ஒரே ...ஒற்றுமை நூல் ...லம். நம்மை எண்ணத் ..., எழுத்தால், கருத்தால, ...டர்புபடுத்தும் ஒரேகயிறு ...கிலம். அந்தக் கயிற்றுல் ...மைந்த கட்டினை ஒற்று ...யை நூல் இழையை ...றுக்கும் கத்தியே இந்தி! ...தை நுழைப்பதே ஒற்று ...மையை அறுப்பதற்குத்தான ...தை எல்லோரும்எண்ணிடச் ...வதே நமது கடமை.

...இந்தி எதிர்ப்பு மாநாடு ...ன நாட்டு மக்களின் சிந் ...க்கு எதுத்து வைக்கத் ... கூடிகிறது. சிந்தனையுள் ...ர். சிந்திக்கத்தெரிந்தோர் ...ிவு பெறட்டும்.

★

பிரதிநிதி;
...எம். ஜி. மாதவன்,
...துத்தெரு, மைலாப்பூர்
சென்னை-4

இந்தி எதிர்ப்பு மாநாடுகள்!

★ (ஒரு கண்ணோட்டம்) ★

இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்குஐம்பதாண்டு வரலாறு உண்டு. இந்தியைஎதிர்த்து முதன் முதல் குரல் எழுப்பப்பட்ட இடம் திருச்சிதான். அதே திருச்சியில்தான் இன்று இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெறுகிறது.

இந்தியைத் தேசிய மொழியாகப் பரப்ப வேண்டும் என்று அகில இந்திய காங்கிரசுக் கமிட்டி முனைந்தபோது, தமிழ்மொழிக்குவரவிருக்கும் தீங்கை முளையிலேயேகிள்ளியெறிய வேண்டும் என்ற முடிவுடன் 1928-ம்ஆண்டே திருச்சியில் தமிழறிஞர்கள் பலர்கூடி இந்திக்கு எதிராகக் குரல் கொடுத்தனர். அன்றுமுதலே தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்பு உணர்ச்சி மெல்லமெல்லப் பரவத் தொடங்கியது.

காங்கிரசுக்காரர்கள், ராஷ்டிர பாஷா' என்னும் பெயரில் இந்தியைத் தேசிய மொழியாகப் பரப்பத் துடித்தனர். இந்திப்பிரசார சபாக்கள்' காங்கிரசுக்காரர்களால் தோற்றுவிக்கப்பட்டன. காங்கிரசாரின் இந்தப்போக்கைக் கண்டித்து தந்தை பெரியார் அவர்கள் 1929 ஜனவரி 20 ஆம் நாள் தமது 'குடிஅரசு' வார இதழில் 'ஹிந்திப் புரட்டு' என்ற தலைப்பில் காரசாரமான தலையங்கம் ஒன்று எழுதினார். தொடர்ந்து பெரியார் இந்தியை எதிர்த்து எழுதியும், பேசியும் வந்தார்.

1937 ஆம் ஆண்டு சென்னைமாகாணத்தில் காங்கிரசு ஆட்சி ஏற்பட்டதால், முதலமைச்சர் இராசகோபாலாச்சாரியார், தமக்கிருந்த அதிகாரத்தைக் கொண்டு, பள்ளிகளில் இந்தியை கட்டாயப் பாடமாக்கினார். 21 4 1938 ல் கட்டாய இந்தித் திணிப்பு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

காங்கிரசு ஆட்சியாளர்களின் இந்தித் திணிப்பு முயற்சியை எதிர்க்கும் வகையில் 4.10.1937 அன்று சென்னை கோகலே மண்டபத்தில் ஒரு மாபெரும் இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. மறைமலை அடிகளார்மாநாட்டுக்குத்தலைமைவகித்தார். நாவலர் சோமசுந்தர பாரதியார். முன்னாள் அமைச்சர் எஸ். முத்தைய முதலியார், அலமேலு மங்கைத் தாயாரம்மாள், அறிஞர் அண்ணா, மயிலை சிவமுத்து முதலியோர் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

அடுத்து 26 12 1937 இல் திருச்சியில்இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது, தமிழறிஞர் கா. சு. பிள்ளை தலைமை வகித்தார். தஞ்சை தமிழவேள். த. வே. உமா மகேசுவரம் பிள்ளை மாநாட்டைத் திறந்து வைத்தார், நாவலர் சோமசுந்தர பாரதியார் வரவேற்புரையாற்றினார்.

இந்த மாநாட்டில்தான் தந்தை பெரியார் அவர்கள், சென்னை மாநில ஆளுநருக்குக் கடுமையான எச்சரிக்கை விடுத்து உரையாற்றினார்.

பின்னர் 27.2 1938 இல் காஞ்சியில் ஓர் இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. ஆந்திர அறிஞர் சர். கே. வி. ரெட்டி தலைமை வகித்தார் கேரளத்து அரசியல் மேதை கிருஷ்ணன் நாயர் மாநாட்டைத் திறந்து வைத்தார்.

அதே ஆண்டில் வேலூர் கோவை,சேலம் காரைக்குடி முதலிய நகரங்களிலும் இந்தி எதிர்ப்பு மாநாடுகள் நடைபெற்றன. இந்த மாநாடுகளில் மறைமலை அடிகள், திரு வி. க. சோமசுந்தர பாரதியார், சர். ஏ. டி. பன்னீர் செல்வம், சி. டி. நாயகம், கி. ஆ. பெ. விசுவநாதம், கே. வி. அழகிரிசாமி, சி.வாசுதேவ், பி. பாலசுப்பிரமணியம், புதுக்கோட்டை திவான் கலிபுல்லா சாகிப் போன்றவர்கள் கலந்து கொண்டனர்.

3.6.1938 அன்று சென்னை கோடம்பாக்கத்தில். சைதை வட்ட இந்தி எதிர்ப்பு மாநாடு மறைமலையடிகள் தலைமையில் நடைபெற்றது. சுவாமி அருணகிரிநாதர், ஈழத்து சிவானந்த அடிகள், சாமி சண்முகானந்தர் போன்ற துறவிகளும் இம்மாநாட்டில் பங்கு கொண்டனர்.

1938 நவம்பர் 13—ஆம் நாள் சென்னை ஒற்றைவாடை அரங்கில், டாக்டர் தருமாம்பாள் அம்மையாரின் முயற்சியால் இந்தி எதிர்ப்பு மகளிர் மாநாடு நடைபெற்றது. மறைமலையடிகளாரின் மகள் திருவாட்டி நீலாம்பிகையம்மையார் தலைமை வகித்தார். திருமதி மீனாம்பாள் சிவராஜ் தமிழ்க்கொடி ஏற்றுவித்தார். திருமதி வ. பா. தாமரைக்கண்ணியம்மையார் வரவேற்புரை நிகழ்த்தினார், இந்த மாநாட்டில்தான்பெரியாருக்கு 'பெரியார்' என்ற பட்டம் லழங்கப்பட்டது.

1938 டிசம்பர் 29, 30 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாடு முழுக்க முழுக்க இந்தி எதிர்ப்பு மாநாடாகவே நடைபெற்றது. இந்தியை எதிர்த்ததற்காகப் பெரியார் சிறைப்பட்டுவிட்டதால், பெரியாருக்குப் பதில் சர். ஏ. டி. பன்னீர் செல்வம் தலைமை வகித்தார். மாநாட்டை பொட்டி நடைபெற்ற ஊர்வலத்திலும் இந்தி எதிர்ப்பு முழக்கங்களே இடம் பெற்றன.

தொடர்ந்து தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும், மாவட்ட, வட்ட அளவில் இந்தி எதிர்ப்பு மாநாடுகளும், பொதுக் கூட்டங்களும், ஊர்வலங்களும் நடைபெற்ற வண்ணமிருந்தன.

இறுதியாக 19 2.1940 அன்று சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் பெரியார் அவர்கள் ஆட்சியாளருக்கு இறுதி எச்சரிக்கை விடுத்தார் இதனையடுத்து இரண்டே நாளில்,அதாவது 21.2.1940 இல், கட்டாய இந்தி கைவிடப்பட்டதாக அரசு அறிவித்தது.

இவ்வாறு முதல் கட்ட இந்தி எதிர்ப்புப் போர் ஏறக்குறைய இரண்டரையாண்டுக் காலம் தொடர்ந்து நடைபெற்று வெற்றி பெற்றது

அடுத்து ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரை முதலமைச்சராகவும், திரு. டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியாரைக் கல்வியமைச்சராகவும் கொண்ட காங்கிரசு அமைச்சரவை மீண்டும் தமிழ்நாட்டுப் பள்ளிகளில் இந்தியைத் திணிக்க முனைந்தது. அதாவது பள்ளிகளில், இந்தி, சமஸ்கிருதம் அராபி,தெலுங்கு மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் ஏதேனும் ஒன்றை இரண்டாவது பாடமாகக் கட்டாயமாகக் கற்கவேண்டும் என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டது. மறைமுகமாக இந்தியைக் கட்டாயப்படுத்துவதே இதன் நோக்கம். இதற்கான ஆணை 20.6 1948 இல் பிறப்பிக்கப்பட்டது.

மீண்டும் இந்தி ஆதிக்கம் தலைதூக்கத் தொடங்கியதைக்கண்டு தமிழ் மக்கள் கொதித்தெழுந்தனர். 17.7.1948 அன்று சென்னை செயின்ட்மேரி மண்டபத்தில் திராவிடர் கழக சார்பில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. மறைமலையடிகளார் தலைமை வகித்தார். தந்தை பெரியார், தமிழ்ப் பெரியார் திரு. வி. க., புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அறிஞர் அண்ணா. ம. பொ. சிவஞானம், நாரணதுரைக்கண்ணன் மற்றும்பல தமிழறிஞர்களும், துறவிகளும் கலந்துகொண்டனர். இந்த மாநாட்டையடுத்துதான் தமிழ்நாட்டில் இந்தியை எதிர்த்து இரண்டாம் கட்டப் போர் மூண்டது. அறிஞர் அண்ணா அவர்களை முதலாவது சர்வாதிகாரியாக (தளபதியாக)க் கொண்டு இந்தி எதிர்ப்பு மறியல் தொடங்கி. அந்த ஆண்டு முழுவதும் நடைபெற்றது.

1948 அக்டோபர் 23, 24 ஆகிய தேதிகளில் இந்தியை எதிர்க்கும் முகத்தான் ஈரோட்டில்,திராவிடர்கழகத்தனி(மாகாண) மாநாடு அறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்றது. தமிழ்ப் பெரியார் திரு. வி. க., கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், அஞ்சாநெஞ்சன் அழகிரி முதலியோர் பங்குகொண்டனர். (அழகிரி கடைசியாகக் கலந்து கொண்டுபேசியது இந்த மாநாட்டில்தான்.)

1950-ம் ஆண்டு கல்வியமைச்சர் அவினாசிலிங்கம் செட்டியார் பதவி துறந்து, மாதவமேனன் கல்வியமைச்சரானதும், கட்டாய இந்தி கைவிடப்பட்டது.

இவ்வாறு, தமிழ்நாட்டில், இரண்டாண்டுக் காலம் தொடர்ந்து நடைபெற்ற தமிழர்களின் அறப்போர், இந்தியை இரண்டாவது முறையாகப் புறமுதுகிட்டு ஓடச் செய்தது.

மூன்றாவது முறையாக மீண்டும் இந்தி தமிழ்நாட்டில் தலைநீட்டியது. புகைவண்டி நிலையங்களிலும் அஞ்சலகங்களிலும் பெயர்ப் பலகைகளில் இந்தி நுழைக்கப்பட்டது. அஞ்சலட்டைகள், பணவிடைத்தாள்களிலும் இந்தி இடம்பெற்றது. இதனைக்கண்ட தமிழ் உள்ளங்கள் குமுறின.

1952 ஆம் ஆண்டு சேலத்தில் கூடிய திராவிடர் கழக மாநாட்டில் இந்தியை எதிர்த்துப் போர் துவங்க முடிவு செய்யப்பட்டது.

அதேபோல. 1952 ஜூலை 26 ஆம் நாள் கோவில்பட்டியில் கூடிய தி. மு, க. மாநாட்டிலும் இந்தியை எதிர்த்து நடவடிக்கை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. இந்த மாநாடு கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது

இந்தியை எதிர்ப்பதில் திராவிடர் கழகமும் தி. மு கழகமும் இரட்டைக்குழல் துப்பாக்கியாகச் செயல்பட்டன. 1953 ஆகஸ்டு முதல்நாள் சேலம் மாநாட்டுத்தீர்மானப்படி தந்தை பெரியார் சேலத்திலும் கோவில்பட்டித் தீர்மானப்படி அறிஞர் அண்ணா திருச்சியிலும், கலைஞர் சென்னையிலும் புகைவண்டி நிலையத்தில் உள்ள பெயர்ப் பலகைகளில் இந்தியை அழித்தனர். தமிழ்நாடு முழுவதும் உள்ள புகைவண்டி நிலையங்கள் அஞ்சலகங்களில் இருந்த இந்தி எழுத்துக்கள் தார்கொண்டு அழிக்கப்பட்டன. (அப்போது ம. பொ சி. தலைமையில் இருந்த தமிழரசுக் கழகத்தினர் இந்திக்கு ஆதரவாகமண்ணெண்ணெய் கொண்டு. கழகத்தவர் பூசிய தாரை அழித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது)

தொடர்ந்து, 1953-54, ஆகிய ஆண்டுகளிலும் ஆகஸ்டு முதல்நாள் திராவிடக் கழகத்தினரால் இந்தி அழிப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

1965 முதல் இந்திமட்டுமே இந்தியாவின் ஆட்சிமொழியாக ஆக்கப்படும் என்றநிலைமை உருவானதையொட்டி தமிழ்நாட்டு நலனில் அக்கறை கொண்ட அனைவரும் அச்சம்கொண்டனர், இதன் விளைவாக 1956ஆம் ஆண்டு நுங்கம்பாக்கத்தில் உள்ள தமிழறிஞர். ஏ. சுப்பையா அவர்கள் இல்லத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அதில் இராஜாஜி, பெரியார் அண்ணா உள்பட பல்வேறுதுறைகளைச் சார்ந்தவர்களும் கலந்துகொண்டு இந்திக்கு எதிரான அறிக்கையொன்றில் கையெழுத்திட்டு இந்திய அரசுக்கு அனுப்பிவைத்தனர்!

அடுத்து, 1957 ஆம் ஆண்டு செப்டம்பர் இருபத்தோராம் நாள், தி. மு. க சார்பில் திருவண்ணாமலையில் வடஆற்காடு மாவட்ட இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது.

1938 ஆம் ஆண்டு நடந்த இந்தி எதிர்ப்புப் போரில் மூன்றாவது சர்வாதிகாரியாகப் பொறுப்பேற்று, இரண்டாண்டுச் சிறைத் தண்டனையேற்ற சாமி அருணகிரி அடிகளார் இம்மாநாட்டுக்குத் தலைமை வகித்தார், காஞ்சி சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்தார். முல்லை சக்தி வரவேற்புரையாற்றினார். மாநாட்டில் அண்ணா மற்றும் கழக முன்னணியினர் அனைவரும் பங்கேற்றனர் (இம்மாநாட்டில் அண்ணா அவர்கள் ஆற்றிய உரை இதே இதழில் பிறிதோரிடத்தில் வெளியிடப்பட்டுள்ளது)

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

சிறந்த அரசியல் மரபுகள் உருவாக...!

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இவ்வண்ணமே சுவிட்சர்லாந்து நாட்டிலும் சில நல்ல மரபுகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதனையும் நாம் பின்பற்றவேண்டியது இன்றியமையாதது ஆகும். சுவிட்சர்லாந்து நாட்டில் பிரஞ்சு, ஜெர்மன், இத்தாலி ஆகிய மொழிகளைத் தாய் மொழியாகக் கொண்ட மக்கள் வாழ்கிறார்கள். பிரஞ்சு மொழி பேசும் மாநிலங்களில் பரப்பளவிலும், மக்கள் தொகையிலும் பெரியது ஆன வாட் (VAUD) என்ற மாநிலம் எப்பொழுதும் அமைச்சர் அவையில் பிரதிநிதித்துவம் பெற்று வருகிறது. மேலும் ஒரு நல்லமரபு என்னவென்றால் ஜெர்மன் மொழி பேசும் மாநிலங்களில் பிரதிநிதித்துவம் 5-க்குமேற்படக்கூடாது என்பது ஆகும். இத்தாலி மொழி பேசும் மாநிலம் எப்பொழுதும் பிரதிநிதித்துவம் பெறுகிறது. இதே எடுத்துக்காட்டின்படி நம் நாட்டிலும் மொழி அடிப்படையில்எல்லா மொழிகளுக்கும் பிரதிநிதித்துவம் வழங்குவது மொழிப்பிரச்சினையின் வேகத்தைத்தவிர்க்க உதவும். ஜெர்மன் மக்களை இனம், மொழி அடிப்படையில் அதிகமாகக்கொண்டசுவிட்சர்லாந்து நாடு இரண்டு உலக மகாயுத்தத்திலும், ஜெர்மனோடு கூட்டுச்சேராமல் நடுநிலை நாடாக விளங்கியது சிறப்பான அம்சமாகும்.

நம்முடைய நாட்டைப் பொறுத்தவரை இந்தியைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்களிடம் தாங்கள் 2—ம்தர 3 — ம் தர 4-ம் தர குடிமக்கள் என்ற அச்சமும், உணர்வும் இருந்து வருகின்றன. இந்தியைத்தாய் மொழியாகக் கொண்ட உ. பி., பீகார், ராஜஸ்தான் மத்தியப் பிரதேசம், அரியானா, இமாலயப் பிரதேசம் போன்ற மாநிலங்களைச் சார்ந்த மக்களுக்கு மொழி அடிப்படையில் முதலாம் — தர குடிமக்கள் என்ற உணர்வு இருந்து வருகிறது. குஜராத், மராட்டியம் ஒரிசா, பஞ்சாப், சிக்கிம் போன்ற மாநில மக்களுக்கு மொழி அடிப்படையில்2 ம் தரக் குடிமக்கள் என்ற உணர்வு இருந்து வருகிறது. காஷ்மீர், வங்காளம், ஆந்திரப் பிரதேசம் கருநாடகம், கேரளம், அருணாசல பிரதேசம், நாகலாந்து, மிசோரம், மேகலாயா, அசாம், அந்தமான், லட்சத்தீவு, கோவா போன்ற மாநிலங்களில் வாழும் மக்களுக்கு மொழி அடிப்படையில் 3 ம் தர குடிமக்கள் என்ற அச்சமும், தாழ்வு மனப்பான்மையும் இருந்து வருகிறது. தமிழ் நாடு, புதுச்சேரி போன்ற மாநிலத்து மக்களுக்கு மொழி அடிப்படையில், 4 ம் தர குடிமக்கள் என்ற உணர்வு இருந்து விருகிறது. இதனைத் தவிர்த்து, எல்லோரும் ஒரே தரமான குடிமக்கள், ஒரே நிறை என்ற உணர்வை ஏற்படுத்த இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டோர் இந்தி மேலாதிக்கம் செலுத்த வேண்டும் என்ற உணர்வினைகளையவேண்டியது இன்றியமையாதது ஆகும். தற்பொழுது மத்திய அரசின் ஆட்சி மொழியாக ஆங்கிலம் இருக்கிறது இதனைத் தொடர்ந்து நீடிக்கவேண்டியது இன்றியமையாதது ஆகும். இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டோர் இந்தியத் மேதிய அரசின் ஒரே ஆட்சி மொழியாகவிரைந்துஅரியணை ஏறவேண்டும் என்று துடிக்கின்றனர். அண்மையில், பம்பாயில்நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கியில் பணிபுரியும் என்னுடைய மைத்துனரை நான் சந்தித்தபொழுது, இந்தியிலேயே எழுதவேண்டும் என்று மத்திய அரசு வற்புறுத்துவதாகவும், இதனால் தன்னுடைய பதவி உயர்வு பாதிக்கப்படும் என்றும் முறையிட்டார். இந்தக் கொள்கை நாட்டின் ஒற்றுமையை வெகுவாகப் பாதிக்கும்.

இரா. இராசு
பி. ஏ பி எல்.

அவ்வாறு இந்தியை ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும் என்ற துடிப்புக்கு இடம் கொடுக்கவேண்டியகட்டாயம் ஏற்பட்டால், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 8 வது பிரிவில் கண்டுள்ள 15 மொழிகளையும் மத்திய அரசின்ஆட்சி மொழியாக ஆக்கவேண்டியது இன்றியமையாதது ஆகும் இந்திய அரசியல் சட்டத்தின் 15, 16 உறுப்புக்கள் சமத்துவத்தைப் பற்றிக் கூறுகிறது. இவ்வுறுப்புக்களின்படி நாடு, எந்தக் குடிமகனையும் சமயம், இனம், சாதி, பால், பிறப்பிடம், மூதாதையர், இருப்பிடம் ஆகிய காரணங்களைக் கொண்டு பாகுபாடு, வேறுபாடு காட்டக்கூடாது என்று வரையறுக்கிறது. இவைகளிலே "மொழி" இடம் பெறவில்லை. இந்த உறுப்புகளிலே மொழியையும் சேர்க்கும் வகையில் இந்திய அரசமைப்புச்சட்டத்தைத் திருத்த வேண்டியது இன்றியமையாதது ஆகும்.

மற்றொரு மரபு இந்தியாவின் தலைமை அமைச்சர்பதவியையும், குடியரசுத் தலைவர் பதவியையும் பொறுத்தது ஆகும் நம்நாட்டிலே உள்ள பதவிகளிலே மிகப் பலம் பொருந்திய பதவி தலைமை அமைச்சர் பதவி ஆகும். இதனை இதுவரை உ. பி.யைச் சேர்ந்தவர்கள் வகித்து வந்தனர், தற்பொழுது குஜராத் மாநிலத்தைச் சேர்ந்தவர் வகித்து வருகிறார். இதனை நடு இந்தியாவைச் சேர்ந்தவர்களுக்கும், தென்னிந்தியா, கிழக்கு இந்தியாவைச் சேர்ந்தவர்களுக்கும் வழங்கவேண்டியது இன்றியமையாதது ஆகும். சுவிட்சர்லாந்து நாட்டில்உள்ளஅமைச்சர் அவையில் 7 உறுப்பினர்கள் உள்ளனர். ஏழு பேர்களுக்கும், சம உரிமையுண்டு.

நல்ல மரபுகள் உருவாகட்டும்

அதேபோல இந்தியாவிலும் நிலைமையை உருவாக்கலாம் இவ்வாறு நல்லமரபுகளைக் கையாண்டால் இந்தியா வேற்றுமையில் ஒற்றுமை கண்ட நாடாக விளங்கும். இல்லையேல் ஒருமைப்பாடு குறையும் இதுபோல பல மரபுகளை ஏற்படுத்த மக்கள் கருத்தினைத் திரட்டுவோமாக!

இந்தி எதிர்ப்பு மாநாடுகள் - ஒரு கண்ணோட்டம்..

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

தொடர்ந்து தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புக் கனல் வீசிக் கொண்டேயிருந்தது. 1965 ஆம் ஆண்டு முதல் இந்தியே இந்தியாவின் ஆட்சி மொழியாகும் என்று அறிவித்த குடியரசுத் தலைவர் 1960 ஆம் ஆண்டு ஆகஸ்டில் தமிழகத்துக்கு வருகை தர இருப்பதாகச் செய்தி வெளியாயிற்று. அந்த சமயத்தில்தான் சென்னையில் தி. மு க. சார்பில் ஓர் இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. 1960 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முப்பத்தோராம் நாள் கோடம்பாக்கம் யுனைடெட் இந்தியாகாலனியருகில் உள்ள அண்ணா நகரில்தான் இந்த மாநாடு நடைபெற்றது. (இந்த மாநாடு நடைபெற்ற திடலுக்கு அருகில்தான் பின்னர் 1965 இல், தே. மு. சிவலிங்கம் இந்தியை எதிர்த்துத் தீக்குளித்தார்)

இந்த மாநாட்டுக்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமை வகித்தார்.

இந்த மாநாட்டுக்கு ஒரு புதுமையான முறையில் விளம்பரம் செய்யப்பட்டது

ஆபாச சுவரொட்டி விளம்பரத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி அன்றைய காங்கிரசு ஆட்சியாளர்கள் இந்தி எதிர்ப்பு மாநாட்டு விளம்பரச் சுவரொட்டி ஒட்டுவர்களையும் கைது செய்து வந்தனர். ஆட்சியாளரின் இந்தப் போக்கைக் கண்டிக்கும் வகையில், தி. மு. க. மாநகராட்சி உறுப்பினர்களேமாநாட்டுக்கானவிளம்பரச் சுவரொட்டி ஒட்டப்பட்ட தள்ளு வண்டிகளை அவரவர் வட்டங்களில் இழுத்துக்கொண்டும் விளம்பரத் தட்டிகளைக் கையிலேந்தியும் சென்றனர். இது மாநாடு பற்றி பரபரப்பானதொரு விளம்பரத்தை ஏற்படுத்தியது.

இந்த மாநாட்டில் அண்ணா அவர்கள் பேசும்போது,

பண்டிதரின் உறுதிமொழிகளையும் மீறி இந்தியைத் திணிக்க உத்தரவு பிறப்பித்து விட்டுத் தமிழகத்தில்பவனி வரப்போகும் குடியரசுத் தலைவரை வரவேற்கப் போகிறீர்களா?

என்று கேட்டார்.

கூடியிருந்த மக்கள் 'மாட்டோம்; மாட்டோம்'' என்று எழுந்து நின்று ஆவேசம் பொங்க முழங்கினர்.

மக்களின் இந்த ஒலிமுழக்கத்தையடுத்து பேரறிஞர் அண்ணா அவர்கள் வரும் ஆகஸ்டு 6-ந் தேதி முதல் 16ந் தேதி முடிய (ஆகஸ்டு 15ந் தேதிநீங்கலாக) தமிழகமெங்கணும் குடியரசுத் தலைவர் செல்லுமிடமெல்லாம் கறுப்புக்கொடி காட்டுவோம்' என்று அறிவித்தார்கள்.

கறுப்புக்கொடி காட்டுவோம்! காட்டுவோம்' என்று மக்கள் கரங்களை உயர்த்தி உணர்ச்சிமிக்கக் குரலில் எழுந்து நின்றுமுழங்கினர்

பிறகு அண்ணா அவர்கள் மாநாட்டில் கலந்துகொண்ட தி. மு. க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஒவ்வொருவரிடமும்சென்னை மேயரிடமும் கறுப்புக்கொடிகளைத் தந்தார்.

இந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டில் மேற்கொண்ட முடிவின் எதிரொலியாக, தலைமையமைச்சர் நேருவிடமிருந்து தி. மு. கழகத்திற்கு நேரடியாக எழுத்து மூலம் உறுதிமொழி கிடைத்தது, இந்தியைத் திணிக்கமாட்டோம் என்று.

இந்த உறுதிமொழியை அடுத்து கறுப்புக் கொடிப் போராட்டம் கைவிடப்பட்டது

நேரு உறுதிமொழியை வழங்கியபோதிலும் டெல்லி அரசு இந்தித்திணிப்பில் காட்டி வந்த அவசரமும், தீவிரமும் குறைந்தபாடில்லை. எனவே மீண்டும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது,

எனவே மீண்டும் தி. மு. க, சார்பில் 1963 ஆம் ஆண்டு அக்டோபர் பதின் மூன்றும் நாள் சென்னை நுங்கம்பாக்கம் பெரியார் சாலை அருகில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டில்தான், இந்திய அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவின் 17—வது பகுதியைத் தீயிட்டுக் கொளுத்துவது என்ற முடிவு மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலும் ஒருநாள் அரசியல் சட்ட மொழிப் பிரிவு எரிப்பும், அதனை தொடர்ந்து பதினைந்து நாட்கள் மத்ய அரசு அலுவலக முன் மறியலும் நடைபெறும் என்று அண்ணா அவர்கள் அறிவித்தார்கள்.

இதன்படி அண்ணா உள்பட கழக முன்னணியினர் அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்திலும், மறியலிலும் பங்கு கொண்டு சிறைத் தண்டனை ஏற்றனர்.

(28—5—58 அன்று நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் திருச்சியில் இந்தி எதிர்ப்புப் பாசறைக் கூட்டம் நடைபெற்றது)

பின்னர் 1965 ஜனவரி 17-ஆம் நாள் திருச்சி தேவர் மன்றத்தில் கட்சி சார்பற்ற முறையில் ஓர் இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. இராஜாஜி, ஜி. டி. நாயுடு, கி. ஆ. பெ. விசுவநாதம் கருமுத்து தியாகராசன் முதலியோர் கலந்துகொண்டனர்.

நுங்கம்பாக்கம் மாநாட்டுக்குப் பிறகு இப்போது தி. மு. கழகம் நடத்தும் இந்தி எதிர்ப்பு மாநாடு திருச்சியில் இம்மாதம் 23, 24 ஆகிய நாட்களில் நடைபெறும் மாநாடுதான்.

- மா. செ.

★

கலைஞரும் இந்தி எதிர்ப்பும்!

1938 ஆம் ஆண்டு, தமது பதினுன்காவது வயதில் பள்ளிப் பருவத்தில், திருவாரூர் வீதி களிலே வில் கயல் — புலி பொறித்த தமிழ்க் கொடியை ஏந்தி இந்தி எதிர்ப்பு முழக்கங்களை முழங்கி ஊர்வலம் சென்ற கலைஞர்தான், இன்று இந்தியை எதிர்க்கும் தமிழினத்தின் தானைத் தலைவராகத் திகழ்கிருர்.

கடந்த நாற்பதாண்டுக்கால இந்தி எதிர்ப்பு வரலாற்றில் கலைஞரின் பங்கு மகத்தானது.

1952ஆம் ஆணடு கோவில்பட்டியில் கலைஞர் தலைமையில் நடந்த நெல்லை மாவட்ட தி.மு.க. மாநாட்டில்தான், புகைவண்டி நிலையங்களி லும் அஞ்சலகங்களிலுமுள்ள இந்தி எழுத்துக் களை அழிப்பது என்று முடிவெடுக்கப்பட்டு, இந்தி அழிப்புப் போரும் நடைபெற்றது.

1953ஆம் ஆண்டு தமிழரை இழிவுபடுத்தும் டால்மியாபுரம் என்னும் வடநாட்டு முதலாளி யின் பெயரால் விளங்கிய பெயரை நீக்கி, கல்லக்குடி என்ற தமிழ்ப் பெயரைச் சூட்ட வேண்டும் என்பதற்காக நடைபெற்ற கல்லக் குடிப் போராட்டத்தை, தளபதியாக இருந்து நடத்தி, சிறைத் தண்டனை ஏற்றவரும், பின் னா தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற தும் டெல்லியரசிடம் வாதாடி டால்மியாபுரம் என்ற பெயரை ஒழிக்கச் செய்தவரும் கலைஞரே யாவார்.

1965ஆம் ஆண்டு மூண்ட இந்தி எதிர்ப்புப் புரட்சியைத் தூண்டிவிட்டவர் கலைஞர் என்று பக்தவத்சலம் ஆட்சியால் குற்றஞ்சாட்டப்பட்டு இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி கைதாகி, பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் 62 நாட்கள் வைக்கப்பட்டவரும் கலைஞரேயாவார்.

இன்றும் இந்தியை எதிர்க்கும் தமிழர்கள் அனைவரும், கலைஞரையே நம்பியிருக்கின்றனர்; அவருடைய நாவசைவுக்காகவும், சுட்டுவிரல் அசைவுக்காகவும் காத்திருக்கிருர்கள்.

இந்தி எந்தஉருவிலும் தமிழகத்தில் நுழையக் கூடாது என்றஉறுதியோடுஎதிர்த்துநிற்கும்ஒரே அரசியல் கட்சி கலைஞர் தலைமையில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

★★★★★★★★★★★

அன்னை மொழிகாக்க இன்னுயிர் ஈந்தவர்கள்!

ஆதிக்க இந்தியை எதிர்த்து, அன்னைத் தமிழ் மொழி காக்கத் தங்கள் இன்னுயிரை ஈந்த தியாகச் செம்மல் கள்:

தாளமுத்து
நடராசன்
கீழப்பழுவூர் சின்னச்சாமி
தேவனூர் மு. சிவலிங்கம்
விருகம்பாக்கம் அரங்கநாதன்
அறந்தாங்கி முத்து
சத்தியமங்கலம் முத்து
ஆசிரியர் வீரப்பன்
சிவகங்கை மாணவன் ராஜேந்திரன்
மாயூரம் மாணவன் சாரங்கபாணி
விராலிமலை சண்முகம்

★★★★★★★★★★★

ஓய்வுபெற்ற உழைப்பாளி!

அகிலத்தில் ஆக்கப்பட்ட பொருட்கள் அனைத்துக்கும் உரிமை பெற்ற வர்க்கம் உழைப்பாளி வர்க்கம். ஆனல் அந்த வர்க்கம் இன்றிருக்கும் நிலை......!

உண்ண உணவின்றி — உடுக்க உடை இன்றி இருக்க இடமின்றி வறுமையின் இறுக்கமா பிடியில் சிக்கித் தவிக்கும் கொடுமை!

ஏன் இந்த நிலை?

சுருங்கிய முகம்— ஒட்டிய வயிறு — தோலைச் சுற்றிக் கொண்டிருக்கும் எலும்புக் கூடு!

ஏன இந்தக் கோரக் காட்சி — பரிதாபக் காட்சி?

உழைப்பாளி வர்க்கம் என் ருல், அதற்கு இதுதான் இலக் கணமா? இந்த நிலை மாருதா? மாற்றக் கூடாதா? மாற்ற முடியாதா?

இந்தக் கேள்வி களுக்கு விடை காண எத்தனையோ தலைவர்கள் உழைத்தனர்—உழைக்கின்ற னர்

உழைப்பாளி வர்க்கம் பெற்றே தீர வேண்டிய உரி மையை உழைப்பின் முழு மையான பலனை—மனித வாழ்க்கையின் பூரண சுவை யைப் பெறப் போராடித் தீர வேண்டிய அவல நிலையை மாற்றிட இன்றுவரை எத்த னையோ தலைவர்கள் உரிமைப் போர் தொடுத்துக் கொண்டு தான் இருக்கின்றனர்.

அந்த உரிமைப் போர்ப் படையின் முன் வரிசையில் நின்று குரல் கொடுத்த தலை வர்தான் நம் காட்டூர் கோ பால் ஆம், அதுதான அவர் பெயர் என்ருலும், உழைப் பாளி வர்க்கம்—பாட்டாளி வர்க்கம் அவரை அன்போடு— பாசத்தோடு. ''காட்டூரார்'' என்றழைத்து மகிழும்.

அந்தோ அந்தக் காட்டு ரார்—உழைப்பாளி வர்க்கத் தின் உடன் பிறப்பு—உற்ற நண்பன்......ஐயகோ! நினைக் கவோ, சொல்லவோ நெஞ் சம் பதருகிறது. இப்படியும் ஓர் பேரிடி உழைப்பாளி வர்க்கத்தின் தலையில் விழு மோ... ? அதையும் அந்த வர்க்கம் தாங்கிடுமோ?

இயற்கையின் இரக்கமற்ற செயல் இந்தக்கொடுமையைப் புரிந்து விட்டது! பாட்டாளி களின் அன்புச் சகோதரனை— உரிமைக் குரல் கொடுத்த அந் தச் செயல்வீரனை — அவர்க ளிடமிருந்து பிரித்து விட்டது— இல்லை—பறித்துக் கொண் டது.

பண்டத்தைப் பறிகொடு த்த குழந்தை, பருந்தைப் பார்த்து அழுவதைப் போல், எங்கள் உரிமைக்காக நமது உழைப்பை விநாடியும் வீணின்றி உவந்தளித்த உழைப்பாளியே—எனக் கரம் நீட்டிக் கதறி அழ—இயற்கை கொடுமை புரிந்து விட்டது. காட்டூரார் மறைந்தார்.

தொழிலாளர் முன்னேற் றச் சங்கப் பேரவையின் பொதுச் செயலாளர் காட்டூர் கோபால் அவர்களின் மறைவு தொழிற் சங்கத்துக்கு மட்டு மின்றி கழகத்துக்கும் பேரிழப் பாகும்

பல்லாண்டுக் காலமாகத் தொழிற் சங்கத்தில் ஈடுபாடு கொண்டு ஓயாது உழைத்த வர் காட்டூரார் தொழிற் சங் கப் பணிகளுக்கு தன்னை முழுக்க முழுக்க அர்ப்பணித் துக் கொண்டவர் தொழிற் சங்கப் பணிகளிலே காட்டு ரார் சாதித்துள்ள சாதனைகள் நிரம்ப உண்டு. தொழிலாளி- முதலாளி சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சினையானுலும் சரி அதில் கலந்து கொண்டு சுமுகமான தீர்வு காண்பதில் காட்டூரார் தனித் திறமை பெற்றவர்.

பேரவைச் சங்கத்தைச் சார்ந்த தொழிலாளர்கள் மட்டுமின்றி, மாற்றுச் சங்கத் தைச் சார்ந்த தொழிலாளர் களும், 'காட்டூரார் என்ருல் காட்டூரார்தான்; பிரச்சினை களை எவ்வளவு சுமுகமான முறையில் தீர்த்துவிடுகிருர் நல்ல திறமைசாலி'' என்று மனந் திறந்து பாராட்டும் அளவுக்கு அவரின் தொழிற் சங்கப் பணி அமைந்திருந்தது.

ஏ ஜே. இராபர்ட்

காட்டூரார் அவர்கள் ஓயாது உழைத்த உழைப்பாளி தான். கழகப் பணி தொழிற் சங்கப் பணி —பேரவை அலுவ லகப் பணி—''உழைப்பாளி'' கிழமை இதழ் சிரியப் பணி! இத்தனையும் சங் லிக் கோர் வைபோல் தொடர்ந்து கொண்டிருக்கும்.

காட்டூரார் அவர்கள் சோர்ந்து உட்கார்ந்ததை யாரும் கண்டிருக்க முடியாது. எந்த நேரமும் சுறுசுறுப்புட னேயே இருப்பார்; அலுவலக ஊழியர்களிடம் அன்புடன் பழகுவார்; ''நீங்கள்'' என்ற மரியாதைச் சொல்லுடனே தான் ஊழியர்களிடம் பேசு வார். ஆபீஸ் பையனைக்கூட, ''அடேய்' என்று கூப்பிட மாட்டார். பெயர் சொல்லித் தான் அழைப்பார் அவரின் கீழ் பணியாற்றும் ஓர் ஊழியர் பணிவுடன் ஒதுங்கி நின்று பேசினுலும் அவர், தனக்குச் சமமானவர்களிடம் பேசிப் பழகுவதைப் போலவே அன் புடன் நெருங்கிப் பழகும் பண் புடையவர் என்பதற்காகத் தான்.

அவரைப் போலவே, அலு வலக ஊழியர்களையும் சுறு சுறுப்புடன் இருக்கச் செய் வார்; ஏதாவது வேலைகொடுத் துச் செய்யச் சொல்லுவார்; இது நமக்குப் பழக்கமில்லாத வேலையாயிற்றே என்றுநினைத் துத் தயங்கி நின்ருல், அதைப் புரிந்து கொண்ட அவர், ''உங்களால் முடியும்; இதைச் செய்யுங்கள்; எந்த ஒரு காரிய மும் நம்மால் முடியாது என்று மட்டும் நினைக்கக் கூடாது'' என்று அறிவுரை வழங்குவார்.

பேரவை அலுவலகத்தில் காட்டூரார் இருக்கிருர் என் ருல், அலுவலக ஊழியர்களில் அவரும் ஒருவர் என்று நினைக் கும் அளவுக்கு ஊழியர்க ளாகிய எங்களுடன் அவரும் சேர்ந்து கொண்டு ஏதாவது ஒரு வேலையைச் செய்து இருப் பார்; உயர்வு தாழ்வு மனப் பான்மை அவரிடம் துளியும் காண முடியாது:

இதோ பரவை அலுவ லகம் திறந்து இருக்கிறது. ஊழியர்களாகிய நாங்கள் உள்ளேதான் இருக்கிருேம். மாறி மாறி எங்களைப் பெய ரிட்டு அழைக்கும் அந்தக் குர லின் ஒலி கேட்கவில்லை, அலு வலகமே ஒரே அமைதி.

அதோ! காட்டூரார் அம ரும் நாற்காலி தன் எஜமா னின் வருகையை நோக்கிக் காத்திருக்கிறது; அலங்கார மாக—அவசர அவசரமாக வந்து அமருவாரே ஏன் இன் னும் வரவில்லை என்று வாயிற் கதவை நோக்கிக்கொண்டிருக் கிறது.

ஐயகோ......!

ஓயாது உழைந்த அந்த உழைப்பாளி ஒய்வு பெற்றுக் கொண்டார்; ஆம், நிரந்தர ஓய்வு பெற்றுக் கொண்டார்:

மனைவி மக்கள் கதறக் கதற......கழகத்தையும்— தொழிற் சங்கத்தையும் இரு கண்போல் கருதிப் பணியாற் றிய செயல் வீரனே; அடக்கு முறைக் கொடுமைக்கும் அஞ் சாது அசையாது நின்றகொள் கைக் குன்றே! என் அன்பு உடன் பிறப்பே—என்று கலை ஞர் கண்ணீர் வடித்திட உழைப்பாளி வர்க்கத்தின் தலைவரே—எங்கள் அன்புச் சகோதரனே என்று பல்லாயி ரம் பாட்டாளிகளின் வேத னைக் குரலையும் கேளாது சென்று விட்டார்; நிரந்தர மாக நித்திரை கொள்ளும் இடத்தை நோக்கி!



ஏழை

வழக்கம்போல் பானுவின் தள்ளுவண்டி 'பார்க்' நோக்கிப் புறப்பட்டது. பானுவின் சின்னஞ்சிறு வாயிலிருந்து சிதறிக்கொண்டேயிருக்கும் மழலை மொழிகட்குப் பதில் பேசியவாறு வண்டியைத் தள்ளிக்கொண்டு போனாள் பார்வதி.

பானுவுக்கு வயது ஆறுகூட ஆகவில்லை. வீட்டில் 'துரு துரு' என்று சும்மாயிருப்பதில்லை. முக்கியமாக அப்பா அம்மாவைப் பேச விடுவதில்லையென்றால் பாருங்களேன்! காலையிலிருந்து கிராமக் கணக்கு வழக்கு, குத்தகைதார் பணம் பட்டுவாடா, கிசான் தொல்லை, வியாபாரப் பிரச்சினை இவ்வளவையும் கவனித்துவிட்டு, மாலை ஆறு மணிக்குமேல் தான் நல்லகண்ணுப் பிள்ளைக்கு ஓய்வு. அந்த ஓய்வு நேரத்தில் ஒரு விநாடிகூட வீணாகப் போய்விடக்கூடாது என்பதுபிள்ளையின் நோக்கம். ஆறு மணி எப்பொழுதுவரும் என்று எதிர் பார்த்திருக்கும் கருணாம்பாள் —ஆமாம் அவரது மனைவி — அந்த அம்மையாரும் அந்தஓயா உல்லாசத்தைத்தான் விரும்பினார்கள்.

அவர்களின் குறுகிய பொழுதை — அந்தத் தீராத விளையாட்டுப் பிள்ளை தொடர்ச்சி கெடும்படி நடு நடுவே அறுத்துவிடும். என்னதான் புத்திரபாசமிருந்தாலும் சற்று நேரம் யாருடைய தொந்தரவுமின்றி இருக்கத்தான் கருணாம்பாளின் மனம் விரும்பியது. அதுவுமென்ன; அந்தத் தம்பதிகள் ஏழைகளா —இன்பம் என்ன நிறம் என்று கேட்க? குடிசை மன்னர்களுக்கும் ராணிகளுக்கும் தான் தங்கள் வறுமை ராஜ்யத்தில் இன்பத்துக்காக ஒரு சில நிமிடங்கள்கூட ஒதுக்க முடியவில்லை கடன்காரர் படையெடுப்பு; தயிர்க்காரி முற்றுகை; இவ்வளவையும் சமாளித்துவிட்டு, இரவு கருணைகூர்ந்து தருகிற சில மணி நேரங்களில் கர்ம வினையை நினைத்துப் புலம்பவும் கடவுளை எண்ணி அழவும் போனதுபோக, மிச்ச நேரத்தை எப்போதாவது பயன்படுத்திக்கொள்ளலாம். அதுவும் ஏழை சாம்ராஜ்யத்தில் பிரஜைகள் அதிகம் ஏழெட்டுக் குழந்தைகளுக்குக் குறையாது. ஏழாவது குழந்தை முதல் குழந்தையைவிட ஆறு வயதுதான் இளையதாயிருக்கும்: கருணாம்பாளைப்போலக் காசைத் தூசாக மதித்துக் கர்ப்பப் பையை மாற்றிப்போட வசதியா படைத்திருக்கிறார்கள் அந்தப் பரிதாப ஜந்துக்கள்!

இளமை தேயாதவன் — எழில் குறையாதவன்—இப் பேர்ப்பட்டவனைத்தான்பார்வதி கணவனாகப் பெற்றிருந்தாள் அவன் 'மில்' வேலை முடிந்து ஐந்து மணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்திருப்பான். அவனை வரவேற்று உபசரிக்க அவளுக்கு வேலை ஒழியவில்லை. எஜமானுக்கும் எஜமானிக்கும் தேவையான ஒப்புக்காக — அந்த ஏழையின் இளம் மனைவி பார்வதி தன் பருவ உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொண்டு பானுவைப் 'பார்க்' குக்கு அழைத்துச் சென்றாள். ஒரு நாள் மட்டுமா? இல்லை. நாள்தோறும். அவள் பெண்ணல்ல; இந்த உலகத்தில் ஒரு மாடு பகல் முழுவதும் எலும்பு முறிய உழைப்பது போல வீட்டு வேலைகள். அவளுக்கு எஜமான்மாளிகை தானே வீடு; மாலையில் சூரியனுக்குக்கூட வேலை முடிகிறது. ஆனால் பார்வதிக்கு...? இதை அவளால் நினைக்கத்தான் முடியவில்லை. நெஞ்சைத் தான் படைத்தானே அந்த நேர்மையற்றவன், வயிற்றையும் ஏன் படைத்தான்?

யார்...யாரைக் கேட்பது?

பூஞ்செடிகளின் அசைவைப் பூங்கொத்துக்களின் அழகைப் பானுவுக்குக் காட்டித் தானும்ரசித்துக்கொண்டிருக்கையில்...வானம் கறுத்துக் கொண்டு வருவதைக் கண்டாள். மாதம் முடிந்து சம்பளம் கேட்கும்போது அதைவிட அதிகமான கறுப்பை எஜமானின் முகத்தில் பார்வதி அடிக்கடி பார்த்திருக்கிறாள். பழகிப்போனபடியால் வானத்தின் மாற்றத்தை இலட்சியம் செய்யாமலே வீடுநோக்கிநடந்தாள். அவள் மன அலைகள் எல்லாம் அன்று ... அத்தான் ... மூக்குத்தி...முத்தப் போட்டி ... இவைகளிலே மோதிக் கொண்டிருந்தன. இன்பக் கனவு இல்லாவிட்டால் அவள் உலர்ந்த உதடுகளில் புன்னகை தலைநீட்டியிருக்காதல்லவா? சுவையான கனவு என்பதால்தான் கண்கள் அப்படி மின்னிக் கொண்டிருக்க வேண்டும். அத்தான் முத்தம் தருவது போன்ற கனவோ— அல்லது முதல் நாள் தந்த நினைவோ — அவள் கன்னங்கூடக் குப்பென்று சிவந்து விட்டது.

ஒன்றுமில்லை; மூக்குத்தி வாங்கி வருகிறான் அத்தான்; பல நாளாகச் சேர்த்த காசு மூக்குத்தியாக உருவெடுக்கிறது. துடைப்பக் குச்சியை எடுத்துத் தூர எறிந்துவிட்டுப் பார்வதியின் மூக்கில் அவனே அந்த ஆபரணத்தை அணிவிக்கிறான். கறுத்த மேனியில் அந்த வெள்ளை மூக்குத்தி பளிச்சிடுவது, நீல வானத்தில் நிலா கிளம்புவதை நினைவூட்டுகிறது

"பார்வதி ... எங்கே?" என்று அத்தான் தன் உதடுகளை மொக்காக ஆக்குகிறான் பார்வதியின் இதழ்களும் குவிகின்றன: மொட்டுகள் மோதி மலர்ந்துவிடுகின்றன, 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்'

கருணாநிதி

— ஒரு முக்கிய பகுதி நடந்தேறுகிறது

கனவு மங்களம்பாடுகிறது. பார்வதி சுயநினைவு பெறுகிறாள். வண்டியில் பானு, "மழை வருது மழை வருது" என்று பாட ஆரம்பித்துவிடுகிறது. இரண்டு கனமான மழைத்துளிகள் பார்வதியின் முகத்தில் விழுந்து சிதறின —உலகை அதிரச்செய்யும் இடிகள் — வான மனிதனின் அகோரச் சிரிப்பு: பயங்கர மின்வீச்சு – கடலைக் கவிழ்த்து விட்டதுபோல் மழை—இமயம் உருண்டு விந்தியத்தில் மோதிடுவது போன்ற அதிர்ச்சி.

பார்வதிக்கு பானு நனைந்து விடுவாளே என்ற பயந்தான் பாவம்—அந்த ஏழைக்கு எஜமான் வீட்டில்—இல்லை, இல்லை குழந்தையின்மேல் — அவ்வளவு பாசம். மனித வர்க்கம் என்பது ஏழைக்கும் பல்தானே! பணக்கார மனிதர் மிருகக் கூட்டம். அதில் மனிதர்களும் தவறிப் பிறப்பதுண்டு. ஏழை மனிதர் குழுவில் துன்பம் தாங்கமாட்டாமல் மிருக வளர்ச்சியடைவோருமுண்டு. அந்தவளர்ச்சி இன்னும் பார்வதியைப் பிடிக்கவில்லை. இதெல்லாம் இரஷ்யப் பேச்சு என்பார் நல்லகண்ணுப் பிள்ளை, இரஷ்யா என்றால் அவருக்கு விஷம் சாப்பிடுகிற மாதிரி,

பார்வதி நன்றாக நனைந்து விட்டாள், குழந்தைக்கு ஒரே பயம்; அலற ஆரம்பித்துவிட்டது. மரத்தடியில் நின்றுவிட்டாள் பார்வதி. அவ்வளவு கஷ்டத்திலும் பயங்கரத்திலும் வரப்போகிற அந்த இன்ப இரவு அவள் முகத்தில் தனித்தெளிவை அதிகப்படுத்தியபடி இருந்தது.

திடீரென்று அந்தமரத்தின் ஒரு பெரிய கிளை முறிந்து விழுந்தது. மழை நின்றுவிட்டது. புயல் ஓய்ந்துவிட்டது.

நல்லகண்ணுப் பிள்ளையின் மோட்டார் வெகுவேகமாகச் சாலையில் பறந்து வந்தது.

முறிந்து கிடக்கும் அந்த மரத்தடியில்...'பானு' என்று சப்தம் போட்டபடி இறங்கினார் பிள்ளை. பானு மயக்கமாய்க் கிடந்தது. தூக்கி மூர்ச்சை தெளிவித்தார், 'அப்பா' என்று கண் விழித்தது குழந்தை. காரில் குழந்தையோடு ஏறி உட்கார்ந்தார் கார் புறப்பட்டுவிட்டது — டாக்டர் வீட்டை நோக்கி!

மரத்தடியில் கிடந்த இன்னொரு உருவம் கண் விழித்தது. 'அத்தான் அய்யோ...' நீண்ட பெருமூச்சு. கண்கள் மூடிக்கொண்டன.

யார் அது?

"ஏழை!"

★



தமிழ் காக்க-
தமிழ்மொழியின்
மானங் காக்க
உங்கள்
காணிக்கை என்ன?

1957 செப்டம்பர் 21 ஆம் நாள் திருவண்ணாமலையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையின் முக்கிய பகுதிகள்.

இன்றைய மாநாட்டிலே காலைமுதற்கொண்டு நடைபெற்று வருகின்ற நிகழ்ச்சிகளை நீங்களெல்லாம் ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தீர்கள்—கேட்டுக் கொண்டிருந்தீர்கள் 1937—ஆம் ஆண்டிலே அந்த நாட்களிலே இந்தி எதிர்ப்பு இயக்கத்திலே ஈடுபட்டிருந்த என் போன்றவர்களுடைய மனமெல்லாம் 1937-ஆம் ஆண்டுக் காலத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டது.

எங்களுடைய மனக்கண் முன்னாலே தொண்டை மண்டலம் பள்ளிக்கூடம் காட்சியளித்தது; இந்துதியலாஜிகல் பள்ளிக்கூடம் காட்சியளித்தது. குதிரைப் பட்டாளம் காட்சியளித்தது. சிறைச்சாலைகளிலே தரப்பட்ட மண்கலயங்களும் காட்சியளித்தன. எங்களுடைய மனக்கண் முன்னாலே அந்த நேரத்தில் மூன்று துறவிகள் தி, மு கழகம் துவக்கப்படாத காலத்திலேயே —இந்தி எதிர்ப்பு இயக்கத்தைத் திறம்பட நடத்துவதற்குப் பக்கத்திலே நின்றார்கள், அவர்களிலே தலைசிறந்தவராக நம்முடைய நண்பர் அருணகிரி அடிகள் அவர்கள் அந்த நேரத்தில் நின்றார்கள். அவர்களுடைய வெண்கலக் குரல் முதுமையின் காரணமாக இன்றைய தினம் கொஞ்சம் தட்டுப்பட்டிருக்கின்றது, அவருடைய வீர உணர்ச்சி முதுமையின் காரணமாகக் குறைந்துவிடவுமில்லை; குலைந்துவிடவுமில்லை,

அவருடைய சொல்லையும். அந்தச் சொல்லோடு கலந்து வந்த வீர முழக்கத்தையும். வீர முழக்கத்துக்குத் துணை நின்ற வீரப்பாடல்களையும் சென்னை நகரத்திலே எல்லா மூலை முடுக்குகளிலேயும் கேட்டிருக்கிறார்கள்.

"என்ன மடமை, இந்த இராச கோபாலாச்சாரிக்கு" என்று இந்தத் தெருக் கோடியிலே இவர் பாடல்களைக் கிளப்பினால் மறுகோடியிலே உள்ளவர்கள் வருவார்கள் அப்பொழுதெல்லாம் ஒலி பெருக்கிகள் இல்லாத காலம் ஒலிபெருக்கிகள் அபூர்வமாக வைக்கப்பட்ட காலத்தில், தெருத் தெருவாக அந்தக் கூட்டங்களை நடத்துவதற்கு அருணகிரி அடிகள் இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபட்ட நேரத்தில், அவர்கள் ஒரு மடத்திலே மிக நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அந்த மடத்திலே அவர்களுக்கு ஒரு குறையுமில்லை, அவரை அண்டிப் பிழைப்பவர்களும், அவரை அடிவருடக் கூடியவர்களும். அவரை 'அடிகளே' என்று அன்புடன் அழைக்கக் கூடியவர்களும், அவருடைய மதவுரையைக் கேட்டு மகிழத்தக்கவர்களும், ஏராளமாக அந்த மடத்திலே இருந்தும், மடத்திற்கு வெளிப்புறத்திலே தமிழுக்கு ஊறு நேரிடுகிறது. தமிழ் மொழிக்கு இழுக்குவருகின்றது எனக் கேள்விப்பட்டவுடன் மடத்திலே இருக்கின்ற காரியத்தைப் பற்றியும் கவலைப் படாமல் காவி உடையோடு, நம்மோடு கைகோத்துக் கொண்டு. தமிழகத்திலே இந்தி எதிர்ப்பு இயக்கத்தை மிகத் திறம்பட நடத்தியவர்கள் அருணகிரி அடிகள் ஆவார்கள்.

அவர்கள் இந்த மாநாட்டுக்குத் தலைமை வகிக்க வேண்டுமென்று நண்பர் நடராசன் மூலம் மெத்த விரும்பி வேண்டிக் கேட்டுக்கொண்டேன். இந்தி எதிர்ப்புமாநாடு நடத்த வேண்டுமென்று நண்பர்கள் விரும்பிய நேரத்தில் அதற்குத் தலைமை வகிப்பதற்கு யாரை அழைக்கலாம்; யாரையாவது தமிழ்ப் புலவரை அழைக்கலாமா? என்று முதலிலே எண்ணினோம்.

அதற்குப்பிறகு தமிழ்ப் பெரும் புலவர்கள், தமிழிலே தான் திறமை பெற்றிருக்கக் கூடுமே தவிர தாய்த்திருநாட்டு விடுதலைக்கு ஏற்ற ஆற்றல் அவர்களுக்கிருந்தாலும், அவர்கள் ஈடுபட்டிருக்கும் அலுவல்கள் அவர்களுக்கு அச்சத்தையூட்டும் என்ற காரணத்தினாலே, அவர்களைத் தேடாமல் இருந்தோம். அப்படியானால், பெரிய அரசியல் தலைவர்கள், நம் இயக்கத்தோடு இரண்டறக் கலந்து இல்லாவிட்டாலும் கொஞ்சம் நெருங்கி வரக்கூடியவர்கள் ஓரத்திலே இருந்தாலும் நம்மிடத்திலே கொஞ்சம் உள்ள அன்பு படைத்தவர்கள் அப்படிப்பட்டவர்கள் யாரையாவது அழைத்துத் தலைமை வகிக்கச் சொல்லலாமா என்று நண்பர்கள் என்னிடத்திலே சொன்னார்கள். எனக்கு ஒரே ஒரு பெயர்தான் நினைவுக்கு வந்தது; அந்தப்பெயரை நண்பர்களிடத்திலே சொன்னேன்

'நான் சொன்னதாக நீங்கள் போய் சுவாமி அருணகிரி நாதரை அழையுங்கள்; அவர்தான் இந்த நேரத்திற்குத் தலைமை வகிக்க மிகப் பொருத்தமானவர்" என்று நான் சொன்னேன்.

'நான் அப்படிச் சொன்னதற்குக் காரணம் இந்தி எதிர்ப்பு மாநாடு

(தொடர்ச்சி 8-ப் பக்கம்

அறிஞர் அண்ணா

இலவம் பஞ்சுகள் என்ன செய்யும்?

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய தினம் நாம் நடத்தினேம் பல நண்பர்கள் இந்தி தமிழகத்திலே நுழைக்கப்பட்டால் நேருகிற பேராபத்தைஎடுத்துச் சொன்னார்கள். அவைகளை மட்டும் அலசி ஆராய்ந்துவிட்டு இந்த மாநாடு முடிவடைந்து விடப்போவதில்லை, இந்த மாநாடு மொழிப் பிரச்சினையை ஆராய்வதற்கு மட்டும் கூட்டப்பட்டதுமல்ல; இந்த மாநாடு தமிழ்மொழிசிலாக்கியமானது என்று எடுத்துச் சொல்லுவதுமல்ல; தமிழ் எவ்வளவு சிலாக்கியமானது என்பதைத் தமிழனிடத்திலே தமிழன் எடுத்துச் சொல்லுவது அவமானத்தின் அறிகுறிஎன்று நான் கருதுகிறேன்.

தமிழ்மொழி ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயிருந்து எத்தனையோ பெரிய படையெடுப்புகளையும், எத்தனையோ பெரிய தாக்குதல்களையும் எத்தனையோ பெரிய தூற்றுதல்களையும் தாங்கிக்கொண்டு இன்றையதினமும் தலைவணக்கரற்ற நிலையிலே இருக்கிறதென்றால் அந்த மொழி நமக்கு உகந்த மொழிதான்— நமக்கு ஏற்ற மொழிதான் — தலைசிறந்த மொழிதான். பாரிலே உள்ள பல மொழிகளிலே தமிழ்மொழி தலைசிறந்த மொழி என்று தமிழன் தமிழர்களுக்கு எடுத்துச்சொல்லிக் கொண்டிருப்பது உண்மையிலேயே சில நேரங்களுக்கு வேண்டுமானால் பொருந்தும்.

காதல் பேசும் நேரத்திலே கணவன் தன் மனைவியை அருகிலே வைத்துக்கொண்டு. "உன்னைவிட அழகியை உலகத்திலே நான் கண்டதேயில்லை" எனக் கொஞ்சுவான். இப்படிக் கொஞ்சத் தேவையில்லையென்றாலும், கொஞ்சுவதாலே இலாபம் கிடைக்கும் என்பதாலே கொஞ்சுகிறான். அதே முறையிலே தமிழ் மொழியை இன்றையத் தினம் கொஞ்சுகிறோமே யொழிய அதற்கு வாதங்கள் தேவையில்லை.

"என்னுடைய மொழியை விடச் சிறந்த மொழி உலகத்திலே வேறொன்றுமில்லை" என்று எடுத்துச் சொல்லுகிற கடமை, எஸ்கிமோ நாட்டுக்காரனுக்கு இருக்கின்றது. பின்லாந்து நாட்டுக்காரனுக்கு இருக்கின்றது. வளமற்ற மொழிபடைத்தவனானாலும் அவனுக்குச் செம்மொழி தாய்மொழிதான்.

நமக்குக் கிடைத்திருக்கின்ற தாய்மொழி பிற மொழிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்தில் பிற மொழியாளர்களெல்லாம் பார்த்து இவ்வளவு எழிலுள்ள மொழியா உங்களுடையது? இவ்வளவு ஏற்றம் படைத்த இலக்கியமா உங்களிடத்தில் உள்ளது? இவ்வளவு சிறந்த இலக்கணத்தையா நீங்கள்பெற்றிருக்கிறீர்கள்? ஈராயிரம் ஆண்டுக்காலமாகவா இந்த மொழி சிதையாமல் சீர்குலையாமல் இருந்து வருகிறது? என்று ஆவலுடன் சிலரும் ஆயாசத்துடன் பலரும், பொறாமையோடு சிலரும், பொச்சரிப்பாலே பலரும் கேட்கத்தக்க நல்ல நிலையிலேதான் தமிழ் மொழி இருக்கின்றது. ஆகையினாலே தமிழ் மொழிக்காக வாதாடுவதற்காகத் தமிழர் மன்றத்திலே தமிழன் பேசவில்லை. ஆனால் தமிழ்மொழி இருக்கின்ற நேரத்தில் பிற மொழியை நுழைக்கின்ற பேதமை, தமிழ்மொழி இருக்கின்ற நேரத்தில் பிற மொழியை ஆதிக்க மொழியாக்குகின்ற அக்கிரமம் — இவைகளைக் கண்டித்து அந்த அக்கிரமத்தை நீக்குவதற்கு வழி என்ன என்று உங்களைக் கேட்க இந்த மாநாடு கூட்டப்பட்டிருக்கின்றது. தமிழ்மொழியிலே அகத்திலே என்ன இருக்கின்றது? புறத்திலே என்ன இருக்கின்றது?— என்பதை இங்கே எடுத்துச் சொன்னார்கள். தமிழ்மொழியிலே பெயர்கள் எப்படியெல்லாம்மாற்றப்பட்டன? என்பதைக் கூற ஊரும் பேரும் எழுதிய பேராசிரியர் சேதுப்பிள்ளை போதும். தமிழ் மொழியிலேயுள்ள இலக்கணச் செறிவுகள் என்னென்ன?- இதற்கு நாவலர் பாரதியார் ஒருவர்போதும். ஆனால் அவைகளுக்காக மட்டுமல்ல: இங்கே இந்த மாநாட்டிலே நாம் கூடியிருப்பது

இந்த மாநாட்டிலே எடுக்கின்ற முடிவினை, இந்தமாநாட்டிலே இந்தியை எதிர்த்தாக வேண்டும் என்று நாம் நிறைவேற்றியிருக்கின்ற தீர்மானத்திற்கு உயிரூட்டம் தரவேண்டுமானால். நீங்களெல்லோரும் 1937—க்கு வருவதற்குச் சித்தமாக இருக்கின்றீர்களா? என்று கேட்பதற்கு மாநாடே தவிர, சிலப்பதிகாரத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கல்ல: கம்பராமாயணத்தினுடைய சுவைகளை எடுத்துச் சொல்வதற்கல்ல; அகத்திலேயும் புறத்திலேயும் உள்ள அணிகளையும்அழகுகளையும் எடுத்து விளக்குவதற்கு அல்ல: அவைகளுக்குத்தமிழ்ப் பெரும்புலவர்கள் போதும்; வகுப்பறைகள் போதும்.

வெட்டவெளியிலே கொட்டகை போட்டு வீதி தவறாமல் தோரணங்கள் கட்டி சிற்றூர்களிலிருந்தெல்லாம் சிங்கநிகர்த்த காளைகள் சாரைசாரையாகவந்து இந்த மாமன்றத்தில் கூடியிருப்பதற்குக் காரணம் இந்தி மொழியை விடத் தமிழ்மொழி சிறந்தது என்று வாதாடுவதற்கல்ல தமிழகத்திலே இந்திமொழி திணிக்கப்பட்டால் அதை எந்த வழியிலே அழித்துக்கட்டுவது; எந்த முறையிலே ஒழித்துக் கட்டுவது: அதற்கு நம்முடைய காணிக்கை என்ன? என்று சிந்தித்து அவரவர்கள் தங்கள் காணிக்கைகளைச்சேர்ப்பிப்பதற்காக இங்குகூடியிருக்கின்றார்களே தவிர வெறும் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக அல்ல.

இங்கே நாம்ஆயிரமாயிரமாகக் கூடியிருக்கிறோம். நாம் வளர்ச்சியடைந்திருக்கிற இந்த நேரத்திலும் நம்மை உண்மையிலேயே அடக்கி ஆளவேண்டுமென்றுகருதுகின்றவர்கள் ஆதிக்கம் செலுத்தக்கூடியவர்கள் இருக்கின்றார்கள் என்றால் அவர்கள் இருக்கின்ற திக்குநோக்கி நீங்கள் தமிழ்ப் பார்வையைக் காட்டவேண்டும். தமிழ்ப் பார்வையிலே குளிர்ச்சியும் உண்டு; கோபக்கனலும் உண்டு. தமிழன் தன்னுடைய நாட்டையே அர்ப்பணிப்பான். தோழன் என்று வருபவனுக்கு. தமிழன். தன்னுடைய தாளை மிதித்தவனை அவனுடைய தலைதாளிலே படுகின்றவரை ஓயமாட்டான் என்பதை நம்முடைய இலக்கியங்களெல்லாம் எடுத்துச் சொல்கின்றன.

எந்த இந்திமொழியைத் தமிழகத்திலே இன்றையத் தினம் புகுத்தவேண்டும் — திணிக்கவேண்டும்; புகுத்தலாம்—திணிக்கலாம்; புகுத்திவிட்டோம் — திணித்து விட்டோம்—என்று எண்ணத்தக்க அளவுக்கு இன்றைய தினம் வடக்கே உள்ளவர்கள் இறுமாந்து இருக்கின்றார்களோ அவர்களெல்லாம் காடுகளிலே சுற்றிக்கொண்டும் குகைகளிலே வாழ்ந்துகொண்டும் மொழியறியாத காரணத்தாலே வாழ்க்கை வழி தெரியாமல் வழுக்கி வீழ்ந்துகொண்டும் இருந்த நேரத்தில் இங்கே அகத்தையும் புறத்தையும் நம்முடைய பெரும்புலவர்கள் இயற்றினார்கள்.

முடியுடை மூவேந்தர்கள் இருந்த காலமும். அவர்கள் காலத்திலே இயற்றப்பட்ட பெரும் இலக்கியங்களும் அந்த நாளிலே வட நாட்டிலே வங்களமானாலும் சரி, பாஞ்சாலமானாலும சரி, பண்டித ஜவகர்லால் நேருவினுடைய தாயகமாகப் போற்றப்படுகின்ற காஷ்மீரம் ஆனாலும்சரி நான் வடக்கே இருக்கின்ற வரலாற்று ஆசிரியர்களைக் கேட்கின்றேன்— அந்த ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே உங்களுக்கு ஏது மொழி? உங்களுக்கு ஏது இலக்கணம்? உங்களுக்கு ஏது இலக்கியம்? உங்களுடைய மொழி எந்த நாட்டிலே பேசப்பட்டது? ஈராயிரம்ஆண்டுக்காலத்துக்கு முன்னாலே தமிழ் வாணிபன் தமிழ் வணிகன். ரோம் நாட்டுக் கடைவீதியிலே பேசினனே! ஈராயிரம் ஆண்டுக் காலத்துக்கு முன்னாலே யவனத்திலல்லவா சென்று வியாபாரம் செய்தான்! ஈராயிரம ஆண்டுக் காலத்துக்கு முன்னாலே உலகத்தோடுதொடர்பு கொள்வதற்கு எங்கள் தமிழ் மொழி எங்களுக்குப் போதுமானதாக இருந்தது

ஈராயிரம் ஆண்டுக் காலத்துக்கு முன்னாலே அறவழியிலே எங்கள் இனமக்களை இழுத்துச் செல்வதற்கு எங்கள் தமிழ் மொழி எங்களுக்குப் போதுமானதாக இருந்தது

பாடிவீடானாலும்சரி. பள்ளியறையானாலும்சரி சாலையானாலும்சரி. சோலையானாலும்சரி, களமானாலும்சரி எங்கேயும் பயன்பட்டுவந்த இந்தத் தமிழ்மொழி பயன்படாது என்று சொல்லுகின்றவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கவேண்டும்? அவர்கள் தமிழ் மொழியறியாத காரணத்தால் அப்படிப் பேசுகிறார்கள் என்று மன்னித்து விடலாம். என்றாலும அவர்களே சிற்சில வேளைகளிலே நம்முடைய முகவாய்க் கட்டையைத்தடவிச் சொல்லுகின்றார்கள்:

"தம்பி தம்பி! தமிழ் மொழியை இகழ்வதாகக் கருதிக் கொள்ளாதே, அது மிக மிக நல்லமொழி. அழகான மொழி. எனக்குப் பேசத் தெரியாதே தவிர,பேசுவதைக் கேட்டிருக்கிறேன். மிக அழகாக இருக்கின்றது" என்று நம்மிடத்திலே சொல்லிவிட்டு "எங்களுடைய மொழி சிலாக்கியமானது என்று சொல்லவில்லை. எங்களுடைய மொழி இலக்கிய வளமில்லாத மொழிதான். நீங்கள் விரும்பினால் அதை ஆறுமாதக்காலத்திலே கற்றுக்கொள்ளலாம். ஓராண்டுக் காலத்திலே கற்றுக் கொள்ளலாம் என்றாலும், தமிழ் ஒரு புறத்திலே இருக்கட்டும்; இந்தியையும் ஏற்றுக் கொள்ளுங்கள் இந்திக்கு ஆதிக்கம் தாருங்கள்" - என்று நம்மைப் பார்த்துக் கேட்கின்றார்கள்.

சிலப்பதிகாரக் காலத்திலாவது,கண்ணகி அளிக்க முடியாத சுகத்தை மாதவி அளித்தாள் என்பதற்காக வழிதவறிய ஒருவணிகன் மாதவி இல்லத்துக்குச் சென்றான். இங்கு வழி தவறிய கோவலர்கள் இல்லை; வழிதவற வேண்டுமென்று நினைக்கின்றவர்களும், "நீ கட்டிய மனைவி அழகாகத்தானிருக்கின்றாள்: நான் கொண்டு வருபவள் குணத்திலேயும் குடிகேடி; பார்ப்பதற்கு அருவருப்பாகதானிருப்பாள்; இருந்தாலும் எத்தனை நாளைக்குத்தான் அந்தக் கட்டழகியோடு நீ இருப்பது? அவளைப் பின் அறையில தள்ளிவிடு: இவளை நீ முன்கட்டிலே வைத்துக் கொள்" என்று கேட்கிறார்கள் என்றால். நாம்கூடச் சும்மாயிருக்கலாம், இங்கே கூடியிருக்கின்ற ஆயிரக்

(12-ம் பக்கம் பார்க்க)

உருவாகிறது!

நம் நாடு
ஆசிரியர்: மு. கருணாநிதி

பொங்கல் மலர்

கழகத் தலைவர் கலைஞர்,
பொதுச் செயலாளர் பேராசிரியர்
பொருளாளர் சாதிக்
துணைப் பொதுச் செயலாளர்
ஏ வி பி ஆசைத்தம்பி
மற்றும் முன்னணி எழுத்தாளர்களின்
எழுத்தோவியங்களுடன்

எண்ணக் களஞ்சியமாய்
கண்ணைக் கவரும் வண்ண முகப்புடன்
விலை ரூ. 2

விற்பனையாளர்கள் முன்கூட்டியே தங்கள் தேவைக்கு எழுதுக.
நிர்வாகி, நம் நாடு, சென்னை – 18.

கவிஞர் முருகுவண்ணனின்
கற்கண்டுக் கவிதைகள்!
கலைஞரின் புகழ் கூறும்
கன்னல் தமிழ் விருந்து!

கலைஞர் கண்ட
வள்ளுவர் கோட்டப் பதிகம்

விலை 50 காசு

திருச்சி இந்தி எதிர்ப்பு மாநாட்டில் கிடைக்கும்
விவரங்களுக்கு:
அன்பர் பதிப்பகம், 8, துளசிங்க முதலி தெரு
பெரம்பூர், சென்னை 600011.

இந்தியா?

1938-ஆம் ஆண்டு டாக்டர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் திருச்சியில் இந்தி எதிர்ப்பு மாநாடு கூட்டிக் கண்டனத் தீர்மானம் கொண்டு வந்து எதிர்ப்புக் கனலை முதன் முதலில் மூட்டியெழுப்பியது. இன்று நம் அண்ணவர் நினைவிற்கும் வருகிறது.

மேலோட்டாரும் வடநாட்டாரும்!

ஆங்கில, பிரஞ்சு, போர்ச்சுகீசியர் நம்மை ஆண்டபோது அவர்கள் மொழியை நம்மேல் சுமத்தி அடிமை கொண்டதுபோல இப்போது வடநாட்டார் இந்தியை இந்தியப் பேரரசின் மொழியாக வலிந்து சுமத்தி அனைவரையும் அடிமைப்படுத்தத் துணிந்து முற்பட்டுள்ளனர். செக்கோசுலோவேகியாவில் தங்கள் மொழியைப் புகுத்த முயன்ற செர்மானியர் படுதோல்வியுற்றதை இவர்கள் அறியார்கள் போலும்.

அயலார் கொடுமையிலும் நம்மவர் கொடுமை உடன் பிறந்தே கொல்லும் வியாதி போலாகும். ஆதலால் அதனை இன்னும் முற்றவிடாது தடுத்துப் போக்குதற்குரிய வழி முறைகளை உடனே மேற்கொள்ள வேண்டும்.

மக்கட்கு நாடும் மொழியும் இரு கண்களாகும். நாடு உரிமை பெற்றது போல மொழியும் உரிமை பெறுவிடில் ஒற்றைக் கண்பெற்ற குருடராவார்.

எனவே, நம் தாய்மொழியாகிய தமிழையும் இந்தியைப் போல் பேரரசின் மொழிகளுள் ஒன்றாக உயர்ந்ததற்குரிய வழிமுறைகளை விரைந்துகைக் கொள்ள வேண்டும்.

எல்லா மொழிகளும் சமமே

எல்லா மொழிகளையும் சரிசமமாகக் கருத வேண்டிய இந்தியப் பேரரசு இந்திக்கு மட்டும் வாரம் காட்டி அதை ஆட்சி மொழியாக்கி வளர்ப்பதற்கும் பரப்புதற்கும் பெரும் பொருள் செலவு செய்வது. முறைகோடிய அறஞ்சாராச் செய்கையாகும். இதுவே மாநிலங்களுக்கிடையே வெறுப்பையும் வேற்றுமையையும் உண்டு பண்ணியிருக்கிறது.

ஆகவே பேரரசின் பீடத்தில் வீற்றிருப்போர் பிறமொழியையும் தம்மொழி போல் பேணி மாநிலங்களுக்கிடையே உறவையும் ஒற்றுமையையும் பெருக்கி நாட்டில் அமைதியைக் காத்தல் அவர் தம் பெருங்கடனாகும்.

இந்தியை அரசு மொழியாகக் கொள்வதற்குக் கூறப்படும் காரணம் அதுபெரும்பான்மையோரால் பேசப்படுகிறதென்பதும், நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் ஒரு பொது மொழி வேண்டும் என்பதுமாகும்.

இக்கொள்கை முற்றிலும் தவறு என்பதற்கு ஆந்திர, குசராத், மராத்திய நாடுகள் மொழிவழி நாடு அமைத்தல் வேண்டிச் செந்நீர் சிந்திய கொடுங்காட்சியே போதிய சான்றாகும்.

உலகிலே முதன் முதல் மக்களாட்சியை மேற்கொண்டு இதுகாறும் ஒற்றுமையுடன் வாழும் பல்வேறு இனங்களையும், மொழிகளையும் கொண்ட சுவிட்சர்லாந்தின் அடிச்சுவட்டை நாம் பின்பற்றலாகாதா?

மேநாடுகளில் பல ஆட்சிமொழிகள்

ஐம்பது இலட்சம் மக்களைக் கொண்ட அந்நாட்டில் நூற்றில் எழுபத்து மூவர் செருமனும், இருபத்தொருவர் பிரஞ்சும், ஐவர் இத்தாலி மொழியும் பேசுகின்றனர். இம்மூன்று மொழிகளும் அரசியல் மொழிகளாக ஒத்தவுரிமையில் உள்ளன. முக்கால் பாகமுள்ள செருமானியர் தங்கள் மொழியை ஏனைப் பிரஞ்சு இத்தாலியர் மீதோ, நூற்றுக்குத் தொண்ணூற்றுநால்வராகவுள்ள செருமானியரும் பிரெஞ்சுக்காரரும் சேர்ந்து நூற்றுக்கு ஐந்து விகிதமுள்ள இத்தாலியர் மீதோ தம் மொழிகளைச் சுமத்துப் கொடுமையை மேற்கொள்ளவில்லை. நெறி, நேர்மை; ஒழுங்கு முறை தவறுத கொள்கையாலும், பிறர் உணர்ச்சியை மதிப்பதாலும் சுவிட்சர்லாந்து ஒன்றுபட்டு ஒற்றுமையோடு கூடி இனிது வாழ்கின்றது. இதுபோலவே யூகோசுலேவியாவில் மூன்று மொழியும் செக்கோசுலோவியா, கனடா தென்னாப்பிரிக்கா, பெல்சியம் நாடுகளில் இரண்டு மொழிகளும் அரசியல் மொழிகளாகவுள்ளன, உருசியாவிலும் 16 மொழிகள் இருக்கின்றன

இந்தியாவா?

ஐம்பத்தைந்து கோடி மக்களைப் பெற்ற நம் பாரதநாட்டில் நூற்றுக்கு 36 பேர்பேசும் இந்தி மொழியை ஏனைய அறுபத்து நால்வர் மீது சுமத்தும் கொடுமை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

மாநில மொழிகளை ஆங்காங்கு அரசியல் மொழியாகவும், அவையனைத்தையும் பேரரசின் அரசியல் மொழியாகவும் ஏற்பதே மக்களாட்சி முறைக்கு ஒத்ததாகும்,

அரைக்கோடி மக்களுடைய சுவிட்சர்லாந்து மூன்று அரசியல் மொழிகளைக்கொண்டிருக்கையில் 55 கோடி மக்களைப்பெற்ற பாரத நாடு 14 அரசியல் மொழிகளைக் கொள்வது மிகையாகாது

அவை மிகுதி எனக் கருதின் வடபகுதிக்கு இந்தியையும் தென்னகத்திற்குத் தமிழையும் கீழ்ப்பகுதிக்கு வங்காளத்தையும் மேல் பகுதிக்கு மராத்தியையும் அரசியல் மொழியாய்க் கொள்ளலாம். வங்காளம், மராத்தி முதலிய கீழ்மேல் நாடுகளில் இந்தியை ஏற்றுக்கொண்டால் வடக்கிற்கு வடமொழிகளில் ஒன்றையும் தென்னாட்டிற்குத் திராவிட மொழிகளில் ஒன்றையும் அரசியல் மொழியாக ஏற்கலாம். வட்டார மொழி

டாக்டர் மெ. சுந்தரம்

எ. ஏ., எம்.லிட்., பிஎச்டி.

களை கல்லூரிப் பாட மொழியாகவும், நீதிமன்றங்களிலும் அரசு அலுவலகங்களிலும் ஆட்சி மொழிடாகவும் தமக்குரிய இடத்தைப் பெறுமலிருக்கும்போது இந்தியைப் பேரரசின் மொழியாக புகுத்துவது பொருந்தாது.

விரிந்து பரந்து பல மொழி பேசும் 55 கோடி மக்களைக் கொண்ட பரதக்கண்டத்தில் ஒரு பொது மொழியை வலுவில் சுமத்த எண்ணுவதும் செயற் படுவதும் தீமையே விளைவிக்கும்.

ஒரு செயல் மாறுன பயனை விளைவிக்குமாயின் மக்கள் கிளர்ந்து எழுமுன் அதனைக் கைவிடுவதன்றே அறிவுடையோர் செயலாகும்.

மாநில மக்களிடையே தொடர்பு நிலவப் பொது மொழியொன்று வேண்டுமாயின், இங்கு இருநூறு ஆண்டுகளாகச் செழித்து வளர்ந்து வேரூன்றிய ஆங்கிலமே ஏற்றதாகும். மேலும் உலகத்தோடு உறவுகொள்ளவும், பெருகிவரும் அறிவியல் அறிவைப் பெறவும் அது நன்கு உதவும். ஆகவே ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகக் கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

பொது மொழி வெறியின் கொடுமை, இந்த அளவில் நிற்கவில்லை, நாட்டுக்கு ஒரு பொது மொழி வேண்டுமென்று சொன்னதுபோல்'

(தொடர்ச்சி 10-ம் பக்கம்)



இந்திக்குத் தமிழ் நாட்டில் ஆதிக்கமாம்

இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம்— நீங்கள்
எல்லாரும் வாருங்கள் நாட்டினரே'
செந்தமிழுக்குத் தீமை வந்தபின்னும்—இந்தத்
தேகமிருந்தொரு லாபமுண்டோ?
(இந்திக்கு)

இப்புவி தோன்றிய நாள் முதலாய்—எங்கள்
இன்பத் தமிழ்மொழி உண்டுகண்டீர்!
தப்பிழைத்தா இந்தி வாழ்ந்ததில்லை — இந்தத்
தான்தோன்றிக்கட்கு என்ன ஆணவமோ?
எப்பக்கம் வந்து புகுந்துவிடும்—இந்தி
எத்தனை பட்டாளம் கூட்டிவரும்?
அற்பம் என்போம் அந்த இந்திதனை— அதன்
ஆதிக்கம் தன்னைப் புதைத்திடுவோம்
(இந்திக்கு)

எங்கள் உடல்பொருள் ஆவியெல்லாம் —எங்கள்
இன்பத் தமிழ்மொழிக்கே தருவோம்!
மங்கை ஒருத்தி தரும் சுகமும் —எங்கள்
மாத்தமிழ்க் கீடில்லை என்றுரைப்போம்!
சிங்கமென்ற இளங்காளைகளே! — மிகத்
தீரம் கொள்வீர் நாட்டினிலே!
பங்கம் விளைந்திடின் தாய்மொழிக்கே — உடல்
பச்சை ரத்தம் பரிமாறிடுவோம்!
(இந்திக்கு)

தூங்குதல் போன்றது சாக்காடு—பின்னர்
தூங்கி விழிப்பது நம்பிறப்பு!
தீங்குள்ள இந்தியை நாம் எதிர்ப்போம்—உயிர்
தித்திப்பை எண்ணிடப் போவதில்லை!
பாங்குயில் கூவிடும் பூஞ்சோலை — நமை
மாட்டி அடைத்துச் சிறைச்சாலை!
எங்கு விடோம் தமிழ்த் தாய்தனையே — உயிர்
இவ்வுடலைவிட்டு நீங்கும் வரை!
(இந்திக்கு)

(புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் 1938-ஆம் ஆண்டு பாடியது.)

திருச்சி வாரீர்!

புலவர் த. சோழப்பன்

இனத்தலைவர் ஆணையிட்டார், தமிழர் தானை
எழுச்சியுறப் போர்ப்பரணி பாடி வாரீர்!
தினவெடுத்த திண்டோளுக் கென்ன வேலை?
தெரிந்திடவே அணிவகுத்துத் திருச்சி வாரீர்!
தனக்கென்று இருக்கின்ற மொழியைக் காக்க.
தமிழ்ப்படையே! தமிழ்ப்பகையை அழிப்ப தற்கு
இனத்தவரே! தமிழ்க்குலமே! கலைஞர் ஆணை!
ஏற்றிடவே மாநாட்டிற் குவந்து வாரீர்!

இருக்கின்ற ஒருதலைவன், இந்திப் பேயை.
எதிர்க்கின்ற தமிழ்த்தலைவன் இருக்கும்போது
இருக்கின்றோம் தமிழ்மறவர் என்று காட்ட,
இன்முகத்தோ டெழுச்சியுடன், திரண்டு வாரீர்!
வருகின்ற எப்பகையும் தூள்தூ ளாக
வழிகாட்டும் நம்தலைவன் கலைஞர் மூச்சைப்
பெறுகின்ற நல்வாய்ப்பைப் பெறுவ தற்கே,
பெருங்கடலாய் ஆர்ப்பரித்துத் திருச்சி வாரீர்!

இருவேடம் போடுதற்குத் தெரியா வாழ்வில்
எப்பகையும் சந்திக்கும் நமது அண்ணன்,
திருக்குவளைப் பூ மன்னன்! அஞ்சா நெஞ்சன்,
திருச்சிக்கு அழைக்கின்றார், இந்திப்பேயை,
வருகின்ற வழியெந்த வழியானாலும்.
வரிப்புலியே! எதிர்ப்பதற்குத் துணிந்து வாரீர்!
இருக்கின்ற ஒருயிரும், தமிழுக் கென்றால்
உலகத்தில் பெறும்பேறு, எந்தப் பேறு?

மந்திக்கு மாலையிடாதே!

பல்வேறுபட்ட சிக்கலான பிரச்சினைகள் இன்று நாட்டை எதிர் நோக்கியுள்ளன. வாட்டிடும் வறுமை வளர்ந்து வரும் வேலையில்லாத் திண்டாட்டம் மத்திய மாநில அரசுகள் போட்ட சட்டங்களாலும், நிறைவேற்றிய திட்டங்களாலும் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை என்பது நிதர்சனமான உண்மை! “ஏழ்மை அகற்றப்படாவிட்டாலும்பரவாயில்லை—ஏழைக்கும் பணக்கார வர்க்கத்திற்குமிடையே இருக்கும் இடைவெளி அதிகமாகிக் கொண்டே வருகிறது’’—என்று அரசுப் பொறுப்பில் ஆண்டாண்டுக் காலமாக இருந்தவர்களே அறிவிக்கும் சுய விமர்சனம்' மொத்தத்தில் வளம் நிரம்பிய ஆனால் வறுமை மிகுந்த நாடுதான இந்தியா என்பது உலகம் நமக்குச் சூட்டும்—புகழாரம்;

நெஞ்சுக்கு நிம்மதியைத் தராத நினைத்து மகிழ முடியாத இந்த நிலைமைகளை, இப்போதிருக்கும் டெல்லி அரசுகூட — தேவைப்படும் அளவுக்கு உணர்ந்ததாகத் தெரியவில்லை. இக்குறைகளை நீக்க, உளப்பூர்வமான அக்கறையோ. உறுதியான நடவடிக்கையோ எடுப்பதாக நம்ப ‘முடியவில்லை—’ ஜனதாவின் இலட்சியமான ‘முழுப் புரட்சியை’க்காற்றிலேபறக்க விட்டு, ஜனதா கட்சிக்குள்ளேயே ‘ஓர்’ முழுப்புரட்சியை சம்பந்தப்பட்டவர்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

எனினும் ‘இருப்பதெல்லாம் இருக்கட்டும்; கிழவியைத் தூக்கி மணையில் வை’ என்பதைப் போல எப்பாடு பட்டாவது இந்தியை இந்தியா முழுவதும் திணித்திட வேண்டும் என்ற அரிப்பு அல்லது வெறி மட்டுமே மத்திய ஜனதா அரசிடம் ஓங்கி நிற்கிறது' டெல்லியில் அமரும் எந்தக் கட்சி அரசுக்கும் இது ஒன்றே இலட்சியமாகவும் போய்விட்டது. இல்லை யென்றால் ‘இந்திய மக்களில் 50 சத விகிதத்தினர். அல்ல அல்ல 60 சத விகிதத்தினர் இந்தி மொழியைப் பேசுகிறார்கள்’’ எனக் கூறப் பிரதமர் மகிழ்ந்திருப்பாரா? ஆக இந்தி வெறி பிடிக்காத எந்த நபரும் இது வரை நமக்குப் பிரதமராக வாய்க்கவில்லை.

இவ்வாறு. தனது விருப்பத்திற்கேற்ப இந்தி பேசுவோரின்எண்ணிக்கையைக்கூட்டிக் காண்பித்துதான், !இந்தியை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று, இந்திய அரசால் கேட்டுக் கொள்ள இயலுகிறதே தவிர, இலக்கணச் சிறப்புடையது—இலக்கிய வளமுள்ளது எனப் பெருமை பேசி வாதிட முடியவில்லை: இது ஒன்றே—ஆட்சி மொழியாக இருக்க இந்தி அருகதையற்றது என்பதற்குப் போதுமான காரணமாகும்!

‘இந்தி’ ஆட்சி மொழியான சம்பவம்—அவசரக் கோலத்தில் அள்ளித்தெளித்த

காகத்தைக் கட்டியழாதே!

அநியாயமாகும். அரசியல் சட்டத்தில் அது ஆட்சிமொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று—அப்படி ஓர் பொது மொழி தேவை என்று விடுதலைக்காகப் போராடிய காந்தியார் விரும்பினார். மற்றொன்று—பொது மொழியாக தேவநாகிரிவடிவுள்ள இந்துஸ்தானியோ அல்லது இந்தியோ இருக்கலாம் என அவர் கருதியது. எனவே. காந்தியாரின் கருத்தை இந்திக்கு ஆதரவாக எடுத்துக்கொண்டு; அரசியல் சட்டத்தில் அதற்காக ஓர் ஏற்பாட்டையும் செய்துகொண்டனர்—இந்திவெறியர்கள் மற்றபடி இயற்கையாகவே இந்தி பெற்றுள்ள ஏற்றத்தாலோ, எழிலாலோ அல்ல அது ஆட்சி மொழியாகும் அருகதையைப் பெற்றது.

இன்னொரு இன்றியமையாத குறிப்பு-வடமாநிலங்கள் சிலவற்றில் மட்டும் பெரும்பான்மையோரால் பேசப்படும் மொழி என்பதற்காக இந்தியை ஆட்சி மொழியாக்கினார்களே தவிர—இந்திய மக்களில் பெரும்பான்மையோர் பேசுகிறார்கள் —என்பதத்காக அல்ல!

உண்மைகள் இல்வாறு உலகறிந்தவைகளானாலும், அது பற்றி அணுவளவும் கவலைப் படாமல்ஒரே ‘பாய்ண்ட்டை’ திரும்பத் திரும்பச் சொல்லும் வக்கற்ற வக்கீலைப் போலவே தேசாய் தினம் தினம் பேசுகிறார்—இந்தி பேசுவோர் எண்ணிக்கைதான் அதிகம்-என்று!

இந்திக்கு லாலி பாடுவோர் —இப்படித்தான். இருக்கின்ற உண்மைகளைப் புரிந்து கொள்ளாதவர்களாகவோ—இல்லாத பெருமையை இந்திக்கு ஏற்றிச் சொல்பவர்களாகவோ இருந்து வருகிறார்கள்!

பொதுவாக, இந்திவாலாக்களுக்கு இந்தப் பெரும்பான்மைக் கணக்கை ஒப்பிப்பது எப்போதுமே இருந்துவரும் பரம்பரைப் புத்தி! நோய்—என்று கூடச் சொல்லலாம்.

★★★★ ★★★★★★★

ஜே எஸ். இராசு

பி. ஏ. பி. இடி.

★★★★★ ★★★★★★

பிரதமர் தேசாயையும் அந்த நோய் கடுமையாகப் பாதித்திருக்கிறது போலும்!

‘இந்தி ஆட்சி மொழியாக வேண்டும் என்பதற்கு மிகத் தீவிர வாதிகளே காரணம் காட்டுகிறார்கள்-இந்தியாவில் 100 க்கு 40 பேர் இந்தி பேசுவதாக; ஆனால் இவர்கள் கூறுகிற 40 சதவிகிதம் என்பதை வாதத்திற்காக அப்படியே ஒப்புக் கொண்டாலும் உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம்—பீகார், ராஜஸ்தான் ஆகிய 4 மாநிலங்களுக்குள் அது அடங்கி விடுகிறது.

இந்தி ஒரு பகுதியில் உள்ள மக்களால் பேசப்படுகிறதேயன்றி இந்தியா முழுவதும் பேசப்படவில்லை. ஆக, ஒரு பகுதியில் பெரும்பான்மையினரால் பேசப்படுவது நாடு முழுவதற்கும் ஆட்சி மொழியாகும் தகுதியைப் பெற்று விடாது’’ எனப் பேரறிஞர் அண்ணா நாடாளு மன்ற மேல் வையிலே தெளிவுபடுத்தினார்!

1965-ல் அண்ணா அளித்த விளக்கம் பிரதமர் தேசாய்க்கே இன்று வரை உறைக்கவில்லை என்பதுதான் நமக்கிருக்கும் வேதனை!

13 ஆண்டுகளுக்கு முன்னால் இந்தி பேசுவோர் தொகை 40 சத விகிதம் என்பதைக்கூட அண்ணா வாதத்திற்காக ஏற்றுக்கொண்டாரே தவிர, உண்மை என ஒப்பவில்லை: ஆனாலும் 50 60 எனப் பிரதமர் கதையளக்கிறார்! ஏ...அப்பா! இந்தி வெறி, எவருடையதகுதியையும் தாழ்த்தி விடும் சக்தி பெற்றிருக்கிறதே!

மந்திக்கு மாலையிடுதல் போல இந்திக்கு வக்காலத்து வாங்குவோர் பிதற்றும், பெரும்பான்மைக் கணக்கை, அண்ணா வேறொருவினாவாலும் வீழ்த்திக் காட்டினார்—“எண்ணிக்கை பலம்தான் ஒரு பிரச்சினைபற்றி முடிவெடுக்க முக்கியமான அளவுகோல் என்றால் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கிற ‘காகத்தைத்தானே இந்தியாவின் தேசீயப் பறவையாக இந்திய அரசு தேர்ந்தெடுத்திருக்க வேண்டும்? ஆனால் குறைவாக இருக்கிற மயிலைத்தானே நாம் தேசீயப் பறவையாக ஏற்றுக் கொண்டிருக்கிறோம்’’ -என்று!

விபரம் புரிந்தவர்கள் அண்ணா விடுத்த வினாவையும் விளக்கத்தையும் பாராட்டினார்கள் பிரதமர் தேசாய் காகத்தை அல்லவா இன்றைக்குக் கட்டி அழுகிறார்; நமக்கும் பரிந்துரைக்கிறார் ? !

மந்திக்கு மாலையிடாதே—காகத்தைக் கட்டிஅழாதே என்று பலகாலும் சொல்லிப் பார்த்தாகிவிட்டது: கேட்கவில்லை. எனவே இத்தகைய இந்தி வெறியர்களுக்கு இறுதி எச்சரிக்கை விடவே. காவிரிக் கரையில் கூடுகிறோம் — களம் பல கண்ட கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் தலைமையில்!

இந்தியா? இந்தியாவா?

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டு மொழிகளுக்கெல்லாம் ஒரு பொது எழுத்து வேண்டும் என்று கூறவும், அதைச் செயலாற்றவும் வடநாடு துணிந்து முற்பட்டு விட்டது, என்னே இதன் பேதமை.

எல்லா மொழிகட்கும்ஒரே எழுத்து வேண்டுமென்போர் மொழியின் அடிப்படை, நுட்பம் இலக்கணம் முதலிய வரலாற்று மரபுகளை அறவே தெரியாதவர்களென்று துணிந்து கூறலாம்

ஒரு மொழிக்கு உடல் போன்றது எழுத்து. உடலாம் எழுத்து அழியின், உயிராம் மொழி அழியும். எழுத்திலக்கணம் நம் மொழிக்கேயுள்ள தனிச் சிறப்பும் பெருமையும் ஆகும் மக்கள் எப்படி உயிரையும். மெய்யையும் பெற்றுள்ளனரோ, அப்படியே தமிழ் மொழி உயிர் எழுத்தையும் மெய்யெழுத்தையும் பெற்றுள்ளது. உயிரும் மெய்யுஞ்சேர்ந்து இயங்குவது போல, உயிர் எழுத்தும் மெய்யெழுத்தும் சேர்ந்து உயிர்மெய்யெழுத்தாக இயங்கிகிறது.

மேனாட்டு மொழிகள் பலவும் ஒரே இனத்தைச் சேர்ந்தவையாதலால் அவை ஒரே வரிவடிவத்தைப் பெற்றுள்ளன. தமிழ் ஒரு தனி இன மொழியாதலால் அதனை வேறு எழுத்துக்களால் எழுதுதல் முற்றும் முடியாததாகும், எடுத்துக்காட்டாக. தமிழ் என்ற சொல்லைத் தேவநாகரியில் எழுதுதல் இயலாது ழகரவொலி தமிழுக்கே சிறப்பாக உள்ளதொன்று. மேலும எ, ஒ, ற ன முதலியனவும் தேவநாகிரியில்இல்லை ஆகவே தேவநாகிரி எழுதது தமிழ் மொழிக்கு முற்றிலும்பொருநதாது தமிழ் வேற்று மொழி எழுத்தை ஏற்றுக்கொள்வது மொழி மரபு வழு என்பதை.

‘வடசொற் கிளவி
வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த
சொல்லாகுமே’

என்ற தொல்காப்பிய நூற்பா தெளிவாக்குகின்றது.

ஒருமொழியின் எழுத்தைப் படிப்பதற்கு எவ்வளவு காலம் செல்லும்? அம்மொழியின் இலக்கிய இலக்கண நுட்பங்களைத்தெரிந்துஇன்புறவன்றோ பல்லாண்டுகள் வேண்டும்? ஆதலின் வடிவத்தை அறிந்து கொண்டமட்டில் மொழியைப் படித்து இன்புற முடியாது. மேனாட்டு மொழிகட்குரிய உரோமன் எழுத்துக்களால் ஆங்கிலம் கற்றவர். அதே எழுத்தால்எழுதப்படும் பிரெஞ்சு. செருமன் முதலிய மொழிகளைப் படிக்கவோ தெரிந்துகொள்ளவோ முடியாது. அதுபோலவே, தேவநாகிரி எழுத்தில் இந்தி படித்தவர். அந்த எழுத்தில் எழுதப்படும் ஏனைய இந்திய மொழிகளைக் கற்றுக்கொள்ள முடியாது

(தொடரும்)

நம் நாடு

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 26-00
ஆறுமாத சந்தா ரூ. 13.00

ஆறு மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

தென்புலம் வெளியீடுகள்!

1. பத்திரிகைச் சுதந்திரம் ஏன்? 2-00
(கலைஞர் வெளியிட்ட புத்தகம்)
2. உலக அரங்கில் மாணவர் புரட்சி 2-00
3. பெரியார் வார்க்கையில் சில தேன்துளிகள் 0-80

கிடைக்குமிடம்

‘தென் புலம்’ 9-ஏ, ஆரணி சாலை‘

வேலூர் வ. ஆ.

ஹிக்கின்பாதம்ஸ்’ கடைகளில் கிடைக்கும்.
மாநாட்டிலும் கிடைக்கும்.

தொலைபேசிவண் கடை: 33213 இல்லம் 31922

நாம்நாடுவோர்தவறுமல் நாடுவது

தமிழக எண்ணெய்ப் பலகாரம்

தயாரிப்பு: விற்பனை நிலையம்

92. திருப்பரங்குன்றம சாலை மதுரை

உரிமையாளர்
பெ. தேவசகாயம்

தனிச்சிறப்பு: சிலேபி, தெக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முருக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்

கிளைகள்: 261. மேலமாசி வீதி, 70. சுவாமி சன்னதி 72. அழகர்கோவில் சாலை. 72 C. டவுன்ஹால்ரோடு, மதுரை.

மொழி வெறியர்களுக்கு வரலாறு புகட்டும் பாடம்!

தோப்பூர் திருவேங்கடம்
எம். ஏ

ஐரோப்பா முழுவதும் நெப்போலியனின் குதிரைகளின் குளம்பொலிகளையும், காலாட் படை வீரர்களின் அணிவகுப்பையும், அவர்களுடைய வாளின் வலிமையையும் பதினெட்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த மக்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள்! நெப்போலியன் சாதாரண படைவீரனாக இருந்து, பின்னர் அவன் வளர்ச்சியின் அறிகுறியாக பிரான்சு நாட்டின் மன்னனாக 'மணி மகுடம்' சூட்டிக் கொண்டதை நாம் அறிவோம். நெப்போலியன் 'ஜனநாயகத்திற்குப்' புதுமெருகினை ஏற்றினான். மக்களின் எண்ணங்களை மதித்து அந்தந்த நாட்டு மக்களின் பண்பாட்டுக்கோ, நாகரீகத்திற்கோ, அந்த நாட்டு மக்களின் உணர்ச்சிகளுக்கோ எந்த விதமான குந்தகமோ, பங்கமோ விளையாமல் பாதுகாத்திட்ட பாதுகாவலனாக விளங்கினான். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் நெப்போலியன் தேசிய உணர்ச்சிகளை மனப்பூர்வமாக மதித்தான். அவன் நிறுவிய அரசினை குடிதழுவிய கோனாட்சி என்று வேண்டுமானால் சொல்லலாம், ஸ்விட்ஜர்லாந்து போன்ற நாடுகளை நெப்போலியன் தன் ஆளுகையின்கீழ்கொண்டு வந்தாலும் அங்கு ஏற்கனவே நிலவிவந்த ஜனநாயகப் பண்புகளை சிறிதும் சீர்குலைக்காமல் ஆட்சியை நிறுவினான். இங்கிலாந்து நாட்டைப் பொறுத்தவரை நெப்போலியன் சிம்மசொப்பனமாக விளங்கினான் அவனுடைய வளர்ச்சி கண்டு இங்கிலாந்து அதிர்ச்சி அடைந்தது ஆகவேதான இங்கிலாந்து தன் கப்பற்படை வலிமையை கொண்டு நெப்போலியனை வெற்றி கொண்டது,

நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பிறகு 1814 ஆம் ஆண்டில் பாரீஸ் ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது. அது 1815 ஆம் ஆண்டில் 'வியன்னா காங்கிரஸ் மூலம் உறுதிபடுத்தப்பட்டது. வியன்னா காங்கிரசில், ஐரோப்பாவில் எல்லா நாடுகளும் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பி அங்கம் பெற்றிருந்தன. துருக்கியைத் தவிர, வியன்னா காங்கிரஸில் ஆஸ்திரியா, பிரஷ்யா, ரஷ்யா. இங்கிலாந்து ஆகிய அன்றைய ஐரோப்பாவின் வல்லரசு நாடுகளாகக் கருதப்பட்ட முக்கிய நான்கும் பங்கு பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்!

வியன்னா காங்கிரஸின் முன்னணித்தலைவராக விளங்கியவர் ஆஸ்த்திரியாவின் பிரதமராக இருந்த மெட்டர்னிக் என்பவரேயாவார். அவர் சுறுசுறுப்பானவர் கெட்டிக்காரர்; ஆஸ்திரியாவின் ராஜதந்திரி என்று கருதப்பட்டவர் ஆகவேதான் அவர் ஐரோப்பாவில் தன்னிகரற்ற செல்வாக்குப் பெற்று, ஐரோப்பாவில் மிகப் பெரிய மனிதர் என்றும் கருதப்பட்டார், அன்று அவருடைய செல்வாக்கு ஐரோப்பா முழுவதும் கொடி கட்டிப் பறந்தது ஐரோப்பாவில் 1815-ஆம் ஆண்டு முதல் 1848-ஆம் ஆண்டுவரை அவர் கீர்த்தி வாய்ந்த மனிதராக விளங்கினார். ஆகவே வரலாற்றாசிரியர்கள் அவர் புகழேணியின் உச்சியில் இருந்த காலத்தை மெட்டர்னிக் சகாப்தம் என்று அழைத்தார்கள் ஆனால் அவர் முதலாளித்துவத்தின் மொத்த உருவாகவும்; எதேச்சாதிகாரத்தின் ஏகப் பிரதிநிதியாகவும் விளங்கினர். குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் பிற்போக்கு கொள்கைகளின் ஏஜண்ட்டாகவும் விளங்கினர்.

வியன்னா காங்கிரஸில் இரண்டு பேர் அரச பரம்பரையைச் சார்ந்தவர்கள். ரஷ்ய மன்னனான ஜார் பரம்பரையைச் சார்ந்த முதலாம் அலெக்சாந்தர் பிரஷ்யநாட்டு அரசனான மூன்றும் பிரடெரிக் வில்லியம் ஆகியோர் மேலும் ஆஸத்திரிய பிரதமர் மெட்டானிக், இங்கிலாந்தின் வெளிநாட்டுச் செயலாளர் கேசல்ரீ பிரபு பிரஷ்ய மந்திரி வான் ஆர்டன்பர்க், பிரான்சு நாட்டின் பிரதிநியாக டாலிராண்ட் ஆகியவர்கள் வியன்னா காங்கிரஸ் என்றழைக்கப்பட்ட அரசியல் சூதாட்ட அரங்கின் சூத்திரதாரிகளாக விளங்கிய ஏனையோராவார்கள்.

வியன்னா காங்கிரசின் முக்கிய நோக்கம் ஐரோப்பாவில் நிலையான. நிரந்தரமான அமைதியை உருவாக்குவதே யாகும். ஆனால் அந்தக்காங்கிரசின் முடிவே ஐரோப்பாவெங்கும் போரும் பூசலும், அமைதியின்மையும் நிலவிடவித்திட்டது எனலாம் காங்கிரஸ்' என்ற பெயருக்கே இப்படிகுழப்பத்துக்கும், அமைதியின்மைக்கும் வித்திடுவது பொதுவான பண்புபோலும்! (நம்நாட்டில் அவசர காலத்தில் காங்கிரஸ் ஆட்சியில் மக்கள் பட்ட துன்பங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் புரியும்) வியன்னா காங்கிரஸில் லெஜிட்டமெசி அண்டு காம்பன்சேஷன் என்ற கொள்கைகளின் அடிப்படையில்தான் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அதன் முடிவு'' குரங்கு அப்பம் பங்கிட்ட கதை'' யைப்போல்தான் இருந்தது; வியன்னா காங்கிரசின் முக்கிய நோக்கம் 1792 ஆம் ஆண்டுக்கு முன்னர் வரை எந்தெந்தநாடுகள்யார்யாருக்குச் சொந்தமாக இருந்ததோ, அல்லது எந்த அரசருடைய ஆளுகைக்கு உட்பட்டிருந்ததோ அவர்களுக்கு சட்டபூர்வமாக அளிப்பதென்பதேயாகும். எங்கு இந்தச்சட்டம் நிறைவேற்றப்பட முடியவில்லையோ அங்கு (நான்குவல்லரசு நாடுகளின்மண் ஆசை காரணமாகத்தங்கள்வசம ஆக்ரமித்து வைத்துள்ள நாடுகளுக்கு நஷ்டஈட்டுத் தொகையாக ஏதாவதுகொடுத்துஅவர்களைத் திருப்தி செய்துவிடவேண்டும் என்பதேயாகும்.

இந்த வியன்னா காங்கிரசால் நெட்போலியனால் 1806 ஆம் ஆண்டு அழிக்கப்பட்ட புனித ரோம் சாம்ராஜ்ஜியம் மீண்டும் புதுப்பிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும், இது காங்கிரசின் செயலற்ற இயலாமையைக் குறிப்பதாகும்,

வியன்னா காங்கிரஸ் செய்த மகத்தான தவறு என்னவென்றால் தேசியம் அல்லது நாட்டுப் பற்று என்ற பொருள் பொதிந்த சொற்றொடருக்கு ஓரளவேனும் மதிப்புத்தர மறுத்ததேயாகும். 'வல்லான் வகுத்ததேவாய்க்கால்' எனும் முதுமொழிக்கேற்ப வல்லரசுகளின் பிடிவாதப் போக்கின் அடிப்படையிலே அஃதும் வல்லரசுகளுக்கு சாதகமான முடிவுகளாகவே எடுக்கப்பட்டதாகும்.

தேசிய உணர்வுகளுக்கு மதிப்புத்தர மறுத்ததின் விளைவாகத்தான் ஸவீடன் நாட்டுடன் நார்வே இணைக்கப்பட்டது, ரஷ்யாவோடு போலந்து நாட்டை இணைத்தார்கள். போலந்துக்காரர்கள் ரஷ்யர்களை எப்போதும் தங்கள் எதிரிகளாகவே பாவித்து வந்னர். எங்ஙனம் கிளியையும். பருந்தினையும் ஒரே கூண்டில் அடைத்து வைக்க இயலும்? இத்தாலியர்கள் ஒன்றுபட்ட இத்தாலி வேண்டுமென்றனர். அவ்வாறே ஜெர்மானியர்களும் ஒன்றுபட்ட ஜெர்மனி வேண்டுமென்று குரல்கொடுத்தார்கள்.

பழைய அரசுகளான பிரான்சு, ஸ்பெயின், ஆலந்து ஆகியவைகள் மீண்டும் உருவாக்கப்பட்டன. அல்லது தொடர்ந்து அங்கீகரிக்கப்பட்டன. மக்களின் எண்ணங்களுக்கு மாறுபாடாகஇருந்ததால், மீண்டும் அம்மக்களெல்லாம் கிளர்ந்தெழுந்து 1830 ஆம் ஆண்டிலும் 1848 ஆம் ஆண்டிலும் புரட்சிகளை உருவாக்கினர்கள். வியன்னா காங்கிரசால் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு முடிவு 'மொழி வெறியர்கட்கு' பாடமும், படிப்பினையையும் புகட்டக் கூடியதாகும். பெல்ஜியத்தையும், ஆலந்து நாட்டையும் இணைத்து 'நெதர்லாந்து' என்ற ஒரு புதிய நாட்டை உருவாக்கி ஆலந்து நாட்டின் ஆதிக்கத்தின் கீழ் ஆளும் பொறுப்பை ஒப்படைத்தனர். இரண்டு நாடுகளும் மொழியால் பண்பாட்டால் பழக்க வழக்கங்களால், மதத்தால் வெவ்வேறு பட்ட பிராந்தியங்களாகும். இப்படிப்பட்ட இரண்டு நாடுகளை இணைத்து எத்தனை நாட்களுக்கு ஒன்றுபடுத்தி வைக்க இயலும்?

பெல்ஜியம் மக்கள் ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் பிரஞ்சு அல்லது பிளமீஷ் மொழிகளைப் பேசினர்கள் ஆலந்து நாட்டவர்கள் புரொட்டஸ்டண்ட்மதத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் தாய்மொழியோ டச்சு!

பெல்ஜியம் நாட்டுமக்கள் இந்த இணைப்பை விரும்பவில்லை. தங்கள் நாட்டுச்சுதந்திரத்தை இழக்கச் சம்மதிக்கவில்லை. முதலில் அவர்களை வேற்று நாட்டு அரசனை டச்சு அரசன் ஆளுவதை விரும்பவில்லை. அவனுடைய புரோடெஸ்டண்ட் மதத்தையும் அவர்கள் எதிர்த்தார்கள். இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாகத் தங்கள் மீது 'டச்சு மொழி' திணிக்கப்படுவதை அவர்களால் சகித்துக்கொள்ள இயலவில்லை. இந்த மொழித் திணிப்பை வெறுத்தார்கள்! அருவருப்படைந்தார்கள் அதிருப்தியடைந்தார்கள்! ஆகவே ஆத்திரமடைத்தார்கள்! கிளர்ந்தெழுந்தார்கள் நாட்டுப்பற்று காரணமாகவும், மொழிப் பறறுக்காரணமாகவும் அந்த நாட்டு மக்கள் அனைவரும்ஒன்றுபட்டுக்கிளர்ச்சியைத்தொடங்கினர்கள். அது புரட்சித் தீயாகக் கொழுந்து விட்டெரிந்தது! அந்தப்புரட்சித் தீயை டச்சு மொழி வெறியர்களால் அணைக்கவே இயலவில்லை.

பெரிய வல்லரசுகளான ஆஸ்திரியாவும், இத்தாலியில் எழுந்த கிளர்ச்சியை அடக்க வேண்டியிருந்து ரஷ்யாவும் போலத்துநாட்டுப்புரட்சியை தணிய வைக்க வேண்டிய இக்கட்டான சூழலில் சிக்கித் தவித்தது. பிரஷ்யாவோ தனியாகதானே முன்வந்து டச்சுக்காரர்களை ஆதரிக்கும் துணி விழந்து இருந்தது!

இரண்டு வல்லரசுகளான பிரான்சும், இங்கிலாந்தும் நியாயத்திற்காக, நேர்மைக்காக. நாட்டுப் பற்றுக்காக, சுதந்திரத்திற்காக, மொழி உணர்விற்காகப்போரிடும்பெல்ஜியத்திற்கு ஆதரவாக தங்கள் கப்பல் படையை கொடுத்து ஆதரித்தன. இவ்வாறு மீண்டும்பெல்ஜியம்தங்கள்நாட்டுச் சுதந்திரத்தையும் தங்கள் தாய்மொழியையும் காப்பாற்றிக்கொண்டது பெல்ஜியத்தின் நடுநிலைமை இங்கிலாந்து, பிரான்சு, இரஷ்யா ஆகிய நாடுகளால்1839— ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்றஉடன்பாட்டின் மூலம்உறுதிசெய்யப்பட்டறு

இந்திமொழி வெறியர்கள் சென்ற நூற்றுண்டில் ஆலந்து நாட்டிற்கு ஏற்பட்ட வரலாற்றுப் படிப்பினையை எண்ணிப்பார்த்து இனியேனும் செயல்படுவார்களா? காலம் தான் பதில் சொல்லவேண்டும்

மொழித் திணிப்பின்மூலம் எந்த ஏகாதியத்தியமும் நிலையான ஆட்சியைப் பெற்று நிரந்தாமாக ஆண்டுக் கொண்டிருக்க முடியாது என்பதற்கு டச்சுக்காரர்களின் மொழித்திணிப்பு வரலாறு இந்தி மொழி வெறியர்கட்குஉணர்த்தும் பாடமும், படிப்பினையுமாகும்!

1200 பக்கங்கள் கொண்ட மாநிலத்தன்னாட்சிக்

கலைக் களஞ்சியம்

வழக்கறிஞர்

கே. எஸ். ஆனந்தம் பி காம்., பி. எல்.

எழுதிய

"மலர்க மாநில சுயாட்சி"

" மக்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் விளக்கமளிக்கும் ஏராளமான எடுத்துக்காட்டுக்கள் — மேதைகள் பலரின் மேற்கோள்கள்— அடங்கிய அருமையான கருவூலம்.

-டாக்டர் கலைஞர்

திருச்சி இந்தி எதிர்ப்பு மாநாட்டில் சலுகை விலை ரூ. 25-க்குக் கிடைக்கும்.

இந்தி வேண்டுமா? இந்தியாவேண்டுமா??

'மலர்க மாநில சுயாட்சி' ஆசிரியர்

கே. எஸ் ஆனந்தம் எழுதிய

இந்தியா?... இந்தியாவா?

(ஆட்சிமொழிபற்றிய ஆய்வுக் கருவூலம்)

150 பக்கங்கள் : விலை ரு 4.

திருச்சி இந்தி எதிர்ப்பு மாநாட்டில் வெளியிடப்படும். மாநாட்டில் விற்பனைக்குக் கிடைக்கும்.



மாநாட்டில் பங்குகொள்ளும்



கழகக் காவலர்கள்

அறிஞர் அண்ணா உரை....

(8 ம பக்கத் தொடர்ச்சி)

கணக்கான தாய்மார்கள் ஆர்த்தெழ வேண்டும்.

தமிழ்மொழிக்கு வந்துற்ற இழுக்கைத் தடுப்பதற்கு,—போக்குவதற்கு 1938 ல் தமிழர் பெரும்படை கிளம்பிய நேரத்தில் தாய்மார்கள்தான் அதற்கேற்ற உறுதுணையாக இருந்தார்கள். காலையிலே ஒரு வரலாற்றுஉண்மையை அருணகிரி அடிகள் எடுத்துச் சொன்னார். பெரியாருக்குப் 'பெரியார்' என்ற சிறப்புப் பட்டப் பெயரை அளித்தவர்களே தாய்மார்கள்தான் என்பதை எடுத்துச் சொன்னார்கள்.

அந்த நாட்களையெல்லாம் எண்ணிப்பார்த்தால்...! அந்த நாட்களிலே இந்தியைஒழித்து விட்டோம் என்று நாங்களெல்லாம் இறுமாந்து இருந்தோம்; இருபது ஆண்டுக் காலத்துக்குப் பிறகு மறுபடியும் அந்த இந்தி ஆதிக்கப்பயம் நாட்டு மக்கள் உள்ளத்திலே புகுத்தப்படும்—மறுபடியும் இந்தியை எதிர்க்க வேண்டிய கட்டம் பிறக்கும்—மறுபடியும் அந்தப் பழைய சம்பவங்களெல்லாம் நடந்து தீரவேண்டும்—மறுபடியும் நானும அருணகிரி அடிகளும் சிறைச்சாலைக்குச் செல்ல வேண்டும்—மறுபடியும் தமிழகத்திலே பல்லாயிரக் கணக்கானவர்கள் அறப்போரில் ஈடுபடவேண்டும்—என்று நாங்கள் அந்த நாட்களிலே எண்ணியதில்லை.

ஏனென்றால், அன்றையத் தினம் போரைத் துவக்கிய நேரத்தில், எங்களை எதிர்த்தவரைவிட இன்றையத் தினம் எங்களை எதிர்க்கக் கூடியவர்கள் யாரும் திறமைசாலிகள் இல்லை என்பதை நான் தெளிவாக—திட்டமாகச் சொல்லுகிறேன்.

அந்த நாளிலே எங்களை எதிர்த்தவர்கள் யார்? இந்தியத் துணைக்கண்டத்திலேயே அரசியல் தந்திரத்தில் தன்னை நிகர்த்தவர் யாருமில்லை என்றப் பட்டப்பெயர் பெற்ற ஆச்சாரியார் எங்களை எதிர்த்தார்.

அம்மிக்குழவியும் ஆலாய்ப் பறந்தபோது, இலவம்பஞ்சுகள் இன்றையத்தினம் எங்களை அடக்கலாம் என்று கருதினால் உண்மையிலேயே அது நடக்கக்கூடிய காரியமல்ல, இந்தியைப் புகுத்துவதற்கு யாராவது ஒருவர் இந்தியத் துணைக்கண்டத்தில் துணிவோடு காரியம் செய்தாரென்றால், ஆச்சாரியார் ஒருவர்தான் செய்தார்.

கட்டாயமாக இந்தியைப் பள்ளிகளில் புகுத்துவேன் என்றார். ஒரு புறத்திலே பெரியார் இராமசாமியும், மற்றொரு புறத்திலே நாவலர் பாரதியாரும் இன்னொரு புறத்திலே பன்னீர்செல்வமும் மற்றொரு புறத்திலே அருணகிரி அடிகளும் மற்றவர்களும், முழக்கம் செய்த நேரத்தில் "யார் இந்த நாட்டை ஆளுகின்றவர்கள்? நானா? இராமசாமி நாயக்கரா? பார்த்து விடுகிறேன்." என்றார்.

நான் அவருடைய வீரப் பிரதாபம் பலிக்காமல் போய்விட்டது என்று ஏச்சுக்குச் சொல்கிறேன் என்று கருதாதீர்கள். காலம் எந்த அளவுக்குக் கனிந்துள்ளது என்ற பேருண்மையை உங்களுக்குச் சொல்ல வேண்டுமானால், கட்டாய இந்தியைத் துணிவோடு புகுத்திய ஆச்சாரியார்தான் இன்றையதினம். 'கட்டாயமாக இந்தி நுழையக்கூடாது' என்று நாட்டில் முழக்கம் செய்து வருகிறார்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)



பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் நினைவு நாளில் (24-12-1978) அவர் நீள்துயில் கொள்ளும் நினைவிடம் நோக்கி வணங்குகிறோம்.

'புனித ராஜ்யம்'

கலைஞர் எழுதும் 'புனித ராஜ்யம்' தொடர் நாடகம் அடுத்த இதழில் இடம் பெறும்.



புலவர் கோவிந்தன்
இந்தி எதிர்ப்பு
மாநாட்டுத் தலைவர்

வை. கோபாலசாமி
மாநாட்டுத்
திறப்பாளர்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு.கருணாநிதி அவர்களால், அழகிரி அச்சகத்தில் (156 சூரியநாராயணசெட்டி தெரு, இராயபுரம் 600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம்: 'அன்பகம்' 508 அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை-600018 தொலைபேசி: 441009